Vol.32 Issue No.90 2020 பிப்.26-28 ரூ.20

உண்மை துணிவு உறுதி

# நக்கீரன்

'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' NAKKHEERAN



## ஈஷாவின் சிவராத்திரி கூத்து!
## நயன்தாரா எஸ்கேப்!
## சிக்கிய நிக்கி கல்ராணி!





Feb 26-2020-RIL

# வீடியோவான காமலீலை!
# பாகிஸ்தானுக்கு உளவு சொன்ன இந்திய கடற்படை அதிகாரிகள்!

# அ.தி.மு.க.வில் அதிருப்தி அணி!







Feb 26-2020-RIL

ராங்-கால்

"ஹலோ தலைவரே, அமெரிக்க அதிபர் ட்ரெம்ப்பின் இந்திய வருகையை நாடே எதிர்பார்க்குதுன்னு பிரதமர் மோடி ட்வீட் பண்ணினாரு. ஆனா, பா.ஜ.க.வில் இருக்கும் சுப்ரமணியசாமியோ, இந்த வருகையால் இந்தியாவுக்கு எந்தப் பலனும் இல்லை. ராணுவரீதியான ஒப்பந்தங்களால் அமெரிக்காவுக்குத்தான் லாபம்னு சொல்லியிருக்காரே!"

"ஆமாப்பா.. இந்தியாவின் தொழில் வர்த்தகத் துறையினரும் ட்ரம்ப்பின் ஒன்றரை நாள் விசிட்டால் பெரியளவில் வணிக முதலீட்டுப் பலன் இல்லைன்னும், அமெரிக்க பொருட்கள்மீதான இந்தியாவின் வரி மட்டும் குறைய வாய்ப்பிருக்குன்னும் சொல்லியிருந்தாங்க."

"தலைவரே.. அமெரிக்க அதிபருக்கான இந்திய குடியரசுத்தலைவர் மாளிகை விருந்தில் கலந்துக்க தமிழக முதல்வர் எடப்பாடிக்கு அழைப்பு வந்தது. அவரும் உற்சாகமா ரெடியானாரு. அதே மாதிரி அழைப்பை எதிர்பார்த்த துணை முதல்வர் ஓ.பி.எஸ். அப்செட்டாம். எப்படியாவது அழைப்பு வரும்படி செய்யணும்னு டெல்லி லாபி மூலம் கடைசி நேரம் வரை கடும் முயற்சி செய்து பார்த்தாரு."

"அரசியல்னா கடைசி வரை ட்ரை பண்ணியாகணுமே?"

"தேர்தல் நெருங்கும் கடைசி நேரத்தில், ரஜினி தன்னோட கட்சியை அறிவிப்பார்னு எதிர்பார்க்கப்படுது. எம்.ஜி.ஆர். மாதிரி முதல் தேர்தலிலேயே பெரிய வெற்றிங்கிறதுதான் அவர் தரப்பின் எதிர்பார்ப்பாம். தி.மு.க., அ.தி.மு.க.வுக்கு மாற்றா பா.ம.க. உள்ளிட்ட கட்சிகளுடன் கைகோத்து புது அணி அமைப்பாருன்னு எதிர்பார்க்கப்படும் நிலையில், பா.ஜ.க.வை ஆதரிப்பதா, ஆடிட்டர் குருமூர்த்தி சொல்வதை நம்பலாமான்னும் ஆலோசிக்கப்படுதாம். அதேநேரத்தில், அ.தி.மு.க. தரப்பில் இருந்து முக்கியமான அமைச்சர்கள் சிலரிடம் இருந்தே..



சென்னை உள்பட தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில்
தேசிய புலனாய்வு அமைப்பு சோதனை



சோனியா, ராகுல்

நீங்க கட்சியைத் தொடங்கும் நேரத்தில் நாங்க உங்க பக்கம் வந்துடுவோம்னு தூது விடப்பட்டிருக்குதாம். முதல்வர் எடப்பாடிக்கு எதிரா அதிருப்தி அணி ஒண்ணு அ.தி.மு.கவில் வேகமெடுக்குது."

"சசிகலா ரிலீஸ் ஆனதும் அ.தி.மு.க. அரசியல் வேகம் எடுக்கும்னு சொன்னாங்களே??"

"சசிகலாவோட தண்டனைக் காலம் விரைவில் முடியப் போகுது. அவர் கட்ட வேண்டிய அபராதத் தொகை 10 கோடி ரூபாயை கட்டாவிட்டால், மேலும் 6 மாத காலம் அவர் சிறையில் இருக்க வேண்டிவருமாம். அவரோ அபராதம் கட்ட வேணாம்னு குடும்பத்தாரிடம் சொல்லியிருக்காராம். இப்போதைய சூழ்நிலையில் சிறையில் இருப்பதையே பாதுகாப்பாக உணர்கிறாராம் சசிகலா. விடுதலையானாலும், அமலாக்கப்பிரிவின் வழக்கு உட்பட எதையாவது கிளறி, திரும்பவும் ஜெயிலில் தள்ளத் தான் மோடி அரசு துடிக்கும்னு நினைக்கிறாராம். 1989-ல் ஏற்பட்ட கார் விபத்தில் பாதிக்கப்பட்டு 18 தையல்கள் போடப் பட்ட அவரது கண்களில் இருந்து எப்போதும் நீர் வடிந்தபடியே இருப்பதும் அவரை ரொம்ப தளர்வாக்கியிருக்குதாம். அதோடு, அ.தி.மு.க. நிலவரமும் கலவரமாக இருப்பதால் விடுதலை யைத் தவிர்க்கும் விரக்தி மனநிலையில் இருக்காராம் சசி."

"நித்தியானந்தாவும் விரக்தியான குரலில், தமிழ் நாட்டுக்கே இனி வரமாட்டேன்னு பேசுன வாட்ஸ்ஆப் வீடியோ வந்திருக்கே?"

"மேற்கிந்தியத் தீவுக்கூட்டத்தில் பதுங்கி இருக்கும் நித்தியானந்தா, அப்படியே அமைதியாகத் தன் மிச்ச சொச்ச காலத்தையும் பெண் சீடர்கள் புடை சூழ கழித்துவிட நினைச்சார். ஆனால் பிடதி மற்றும் குஜராத் வழக்குகள், அவரே எதிர்பார்க்காத அளவுக்கு வேகமெடுத்து துரத்த ஆரம்பிச்சிடுச்சி. இவரைப் போலவே பர்கினா பாசோ என்கிற நாட்டில் போலி பெயரில் போலி பாஸ்போர்ட்டை வாங்கிக்கிட்டுத் தப்பி ஓடிய மங்களூரைச் சேர்ந்த நிழல் உலக தாதா ரவி பூஜாரியை, இண்டர்போல் போலீஸின் உதவியோடு கர்நாடகப் போலீஸ் அதிரடியாக மடக்கிக் கைது பண்ணியிருக்கு. கொலை உள்பட 200 கேஸில் சம்பந்தப்பட்ட பூஜாரி மாட்டியதும் சாமியாருக்கு மிரட்சி உண்டாயிடிச்சி. அதனால்தான் தன்னோட மரணம், சொத்து பற்றியெல்லாம் அந்த வீடியோவில் விரக்தியா பேசியிருக்காரு நித்தியானந்தா."

"ஓ.."

"தலைவரே.. காவல்துறை உயர் அதிகாரிகளுக்கான டிரான்ஸ்பர் உத்தரவை எடப்பாடி அரசு அண்மையில் வெளியிட்டிருக்கு. இதன்படி முறைகேடுகள் அதிகம் நடப்பதா புகார் எழுந்த சீருடைப் பணியாளர் துறைக்கு, ஆவின் நிறுவன விஜிலென்ஸ் டிபார்ட் மெண்ட்டில் கூடுதல் டி.ஜி.பி.யா இருந்த சுனில் குமாரை, பதவி உயர் வோடு டி.ஜி.பி.யாக நியமித்திருக்கிறது அரசு. இவர், கறாரான அதிகாரி. மதுரையில் ஐ.ஜி.அந்தஸ்த்துடன், கமிஷனராகப் பணியாற்றி வந்த



ரஜினி

Feb 26-2020RIL

ரவி பூஜாரி



டேவிட்சன் தேவ ஆசிர்வாதத்துக்கு கூடுதல் டி.ஜி.பி. அந்தஸ்த்தைக் கொடுத்து, அவரை அதே மதுரை கமிஷனர் பதவியிலேயே நீட்டிக்க வச்சிருக்கு. உளவுத்துறையின் கூடுதல் டி.ஜி.பி. பதவி அல்லது சென்னை கமிஷனர் பதவின்னு குறி வச்சிருக்கிறார் ஜாபர்சேட். அதை டேவிட்சன் தேவ ஆசிர்வாதமும் எதிர்பார்த்தார். அதனால், எதற்கு சிக்கல்ன்னு தேவ ஆசிர்வாதத்துக்குப் பதவி உயர்வைக் கொடுத்து, அதே போஸ்டிங்கில் உட்காரவைத்துவிட்டதாம் எடப்பாடி அரசு.''

சங்கர்லால்

''தமிழ்நாட்டைத் தாண்டி என்ன நியூஸ் இருக்கு?''

'ட்ரம்ப் விருந்துக்கு காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கு அழைப்பில்லாததால், காங்கிரஸ் ஆளும் மாநில முதல்வர்களும் பங்கேற்பதில்லைன்னு முடிவெடுத்தாங்க. உடல்நிலை சரியில்லாத சோனியா, போன வெள்ளிக்கிழமை முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங்கையும், ராகுல் காந்தியையும் அழைத்து இருவரில் ஒருவரை கட்சிக்குத் தலைமையேற்கச் சொன்னாரு. இருவரும் சம்மதிக்கலை. கட்சியின் சீனியர்களின் சாய்ஸ், ராகுல்காந்தி. அவரோ, ப.சி.யையும் ஏ.கே. அந்தோணியையும் கூப்பிட்டு உங்கள்ல ஒருத்தர் தலைவர் பொறுப்பை ஏற்றுக்கங்கன்னு அழுத்தம் கொடுத்துச் சொல்லியிருக்கார். அகில இந்திய தலைவர் நியமனமானதும், தமிழக காங்கிரஸ் தலைமையிலும் மாற்றம் இருக்குமாம். கே.எஸ்.அழகிரி கொடுத்திருக்கும் மாநில நிர்வாகிகள் பட்டியலை கிடப்பில் வைத்துவிட்டார் சோனியா. புதிய தலைவர் நியமனத்தின் போது, எம்.பி.க்களாக இருக்கும் டாக்டர் விஷ்ணுபிரசாத், டாக்டர் ஜெயக்குமார், வசந்தகுமார் ஆகியோரின் செயல்தலைவர் பொறுப்பையும் புதியவர்களிடம் கொடுக்கணும்னு வலியுறுத்தப்படுதாம்.''

Feb 26 2020 RIL

**“நானும் ஒரு முக்கியமான தகவலைச் சொல்றேன். ஏப்ரலில் நடக்கும் ராஜ்யசபா தேர்தலில் அ.தி.மு.க. 3. பேரைத் தேர்ந்தெடுக்கப் போகுது. அந்த 3 சீட்டுகளுக்கு தம்பிதுரை, கே.பி.முனுசாமி, அரவிந்த் பாண்டியன், நத்தம் விஸ்வநாதன், மாஜி எம்.பி.சவுந்திரராஜன், எக்ஸ் எம்.எல்.ஏ. சிவபதி உள்பட 12 பேர் முண்டியடிக்கிறார்களாம். இவர்களோடு, அரசின் டெல்லி பிரதிநிதியாக இருக்கும் தளவாய் சுந்தரமும் ரேசில் குதித்திருக்கிறார். பிரதிநிதித்துவம் இல்லாத நாடார், முத்தரையர், மற்றும் முஸ்லீம் சமூகத்தினருக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கணும்னு குரல்கள் ஒலிக்குது.”** ●



**“உள்நாட்டுப் பிரச்சனையை சமாளிக்க முடியாவிட்டால், எல்லா பிரச்சனைகளுக்கும் வெளிநாட்டினர்தான் காரணம் என்று சொல்லிவிடு. வெளிநாட்டினர் மீது உள்நாட்டு ஜனங்களுக்கு கோபம் வரும். பிரச்சனைகளில் இருந்து அவர்கள் கவனம் திரும்பிவிடும்”**

சர்வாதிகாரி ஹிட்லரின் தந்திரம் இது. அவருடைய தந்திரத்தை ட்ரம்ப் கையிலெடுத்து மூன்று ஆண்டுகள் முடிந்துவிட்டன. அமெரிக்காவின் சட்டம்-ஒழுங்கு பிரச்சனைக்கும், போதைப்பழக்கத்திற்கும் மெக்சிகோ மற்றும் மத்திய அமெரிக்க நாடுகளான ஹோண்டுராஸ், கவுதமாலா உள்ளிட்டவற்றிலிருந்து அமெரிக்காவுக்குள் குடியேறும் அகதிகள்தான் காரணம் என்றார் ட்ரம்ப்.

இவர் அதிபரானவுடன், மெக்ஸிகோ வழியாக அமெரிக்காவுக்குள் நுழைய முயன்ற அகதிகளை தடுத்து, பெற்றோரைத் தனியாகவும் குழந்தைகளை தனியாகவும் முகாம்களில் அடைத்து சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பினார்.

அவருடைய இந்த நடவடிக்கையை அமெரிக்கர்களே எதிர்த்தார்கள். ஆனால், ட்ரம்ப் தொடர்ந்து தனது முடிவில் உறுதியாக இருக்கிறார். மெக்ஸிகோவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான 1900 கிலோமீட்டர் தொலைவு எல்லையை சுவர் எழுப்பி மூடப்போவதாக அறிவித்தார். முதல்கட்டமாக ஆயிரம் கிலோமீட்டர் சுவர் எழுப்ப 45 ஆயிரம் கோடி டாலர்கள் தேவை என்றார். இதை அமெரிக்க நாடாளுமன்றம் ஏற்கவில்லை. அமெரிக்கா எப்போதும்போல பன்முகத்தன்மையோடு இருப்பதையே விரும்புவதாக பெரும்பான்மை அமெரிக்கர்களும் தெரிவித்துள்ளனர். ஆனாலும் ட்ரம்ப் தனது முடிவில் பிடிவாதமாக இருக்கிறார்.



காந்தி
ஆசிரமத்தில்
மோடியுடன்

தாஜ்மகாலில்
ட்ரம்ப்பும்
மனைவியும்



# மோடியின் மொய் விருந்து! 'நமஸ்தே' ட்ரம்ப்!

Feb-26-2020-RL

அவரைப் போலவே இந்திய பிரதமர் மோடியும் கடந்த ஆட்சிக் காலத்திலும் சரி, இந்த ஆட்சிக் காலத்திலும் சரி, தனது நிர்வாக குளறுபடிகளால் ஏற்பட்ட பாதிப்புகளை பாகிஸ்தானைக் காட்டியே திசைதிருப்பினார். இப்போது, காஷ்மீரை திறந்தவெளி சிறைச் சாலையாக மாற்றி, குடியுரிமை திருத்தச் சட்டம் மூலம் இந்தியா முழுவதும் நாடற்றவர்கள் என்று கோடிக்கணக்கான மக்களை அடைக்க முகாம்களை கட்டத் திட்டமிட்டு வருகிறார். பொருளாதார சீரழிவுகள், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றை திசைதிருப்பி, இந்திய அரசியல் சட்டத்தை வர்ணாசிரம அடிப்படையில் திருத்தும் நோக்கத்தோடு செயல்படுகிறார்.

இந்திய மக்களின் எதிர்ப்பை புறந்தள்ளி ஆர்.எஸ்.எஸ்.சின் செயல்திட்டத்தை அமல் படுத்துவதில் உறுதியாக இருக்கிறார். அந்த வகையில் அமெரிக்காவின் மோடியாக ட்ரம்ப்பும், இந்தியாவின் ட்ரம்ப்பாக மோடியும் செயல்படுவதாக அரசியல் விமர்சகர்கள் கூறு கிறார்கள்.

கடந்த ஆண்டு செப்டம்பரில் அமெரிக்காவில் நடந்த 'ஹவ்டி மோடி' நிகழ்ச்சியில் மோடியுடன் ட்ரம்ப் பங்கேற்றார். அதற்குப் பதில் மொய் விருந்து இந்தியாவுக்கு ட்ரம்ப்பை அழைத்து 'நமஸ்தே டிரம்ப்' என்ற ஒரு நிகழ்ச்சியை நடத்திவிட்டார் மோடி.

அகமதாபாத்தில் காந்தியின் சபர்மதி ஆசிரமம், லால்பகதூர் சாஸ்திரி ஸ்டேடியத்தில் வரவேற்புக் கூட்டம், தாஜ்மகால் விசிட் என ட்ரம்ப்பின் முதல்நாளின் நிகழ்வுகள் திட்ட மிட்டபடி நிறைவேறின. நிறைவுநாளான இரண் டாம்நாளில் மோடியுடன் உரையாடல், விருந்து ஆகியவை நிகழ்ச்சி நிரல்.

பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் ட்ரம்ப்புக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. 'நண்பர் மோடி'யை ட்ரம்ப் பாராட்டினார். உலகை ஆட்டிப் படைக்கும் நாட்டின் அதிபர் வருகைக் காக குடிசைப் பகுதிகளை மறைக்க சுவர் கட்டிய மோடியின் சாதுர்யம் 'பரவலாக'ப் பேசப்பட்டது. பயணத்தின் விளைவாக, இந்தியாவுக்கு என்னென்ன கிடைக்கும் என்பது மட்டும் ரகசியமாக இருக்கிறது.

-ஆதனூர் சோழன்

நாசா விண்வெளி மையத்துக்கு செல்லும் நாமக்கல் மாணவிக்கு ரூ.2 லட்சம் -முதல்வர் உத்தரவு




சிவராத்திரி விழாவில் ஜக்கி வாசுதேவ் ஆட்டம்

இவ்வொரு ஆண்டும் மாசி மாதம் மகா சிவராத்திரி நாளில், தனது ஈஷா யோகா மையத்தில் கூட்டத்தைக் கூட்டி கல்லா கட்டுகிறது சர்ச்சைக்குரிய சாமியார் ஜக்கி வாசுதேவின் கும்பல்.

'பூண்டி வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தைச் சுற்றிவாழும் பழங்குடியின மக்களின் நிலங்களை சட்டவிரோதமாக அபகரித்து, அதில் வானளாவிய கட்டடங்களை எழுப்பிக் கொண்டிருப்பதைப் பற்றி ஆதாரப்பூர்வ புகார்கள் கொடுத்தாலும் ஆள்வோர் அதைக் கண்டுகொள்வதில்லை. சிவராத்திரி தியானம் என்ற பெயரில் அளவுக்கதிகமான ஒளி, ஒலியை எழுப்பி, வனவிலங்குகளைத் துன்புறுத்துவதும் தொடர்கதையாகி இருக்கிறது' என்று ஆதங்கப்படுகிறார்கள் சமூக ஆர்வலர்கள்

மேலும் பேசிய அவர்கள், "இதைத் தட்டிக் கேட்டுப் போராடும் பழங்குடியின மக்களை மிரட்டுவதற்காகவே மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, பிரதமர் மோடியை சிவராத்திரி நாளில் ஈஷாவுக்குக் கூட்டிவந்து, தனது ஆளுமையை நிறுவினார் ஜக்கி. அதேபோல், இங்கு தன்னைப்போலவே கட்டி வைத்திருக்கும் ஆதியோகி சிலையை வியாபாரமாக்க, சினிமா நடிகைகளை ஆடவைத்தார். அப்படித்தான் ஒருமுறை தமன்னாவும், காஜல் அகர்வாலும் வந்து ஆடிவிட்டுப் போனார்கள்.


ஜக்கியிடம் ஆசிபெறும் துணை ஜனாதிபதி வெங்கய்யா நாயுடு

ஜக்கியும், நடிகைகளுமாக இப்படி சேர்ந்து போடும் ஆட்டத்தைப் பார்க்க, அலைமோதும் கூட்டத்திற்கு ரகரகமாக கட்டணமும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. மேடைக்கு நெருக்கமாக இருக்கும் கங்கா கேலரியில் இடம்பெற, தலைக்கு ரூ.50

**அயனாவரம் பாலியல் வழக்கில் தீர்ப்பை எதிர்த்து 2 குற்றவாளிகள் மேல்முறையீட்டு மனு : 4 வாரங்களில் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு**

ஆயிரம் கட்டவேண்டும். அடுத்த வரிசையான யமுனா கேலரிக்கு ரூ.20 ஆயிரமும், நர்மதா கேலரிக்கு ரூ.5 ஆயிரமும், கோதாவரிக்கு ஆயிரம் ரூபாயும் விதிக்கப்பட்டிருந்தது. கடைசி வரிசைக்கு காவிரி எனப் பெயரிட்டு, அதற்கும் ரூ.500 வசூல்செய்தே ஆட்களை அனுமதிக்கிறார்கள். இலவசம் என்ற பேச்சுக்கே இடமில்லை" என்றார்கள்.

இந்தமுறை, திரையுலகின் அட்ராக்ட்டிவ் நட்சத்திரத்தை இந்த விழாவிற்கு அழைத்து, அவர் வரமறுத்ததுதான் ஹாட் டாபிக் என்கிறார்கள் விவரம் அறிந்தவர்கள். ஆம், இளசுகளின் கனவுக் கன்னியாகவும், லேடி சூப்பர் ஸ்டாராகவும் இருக்கும் நயன்தாரா சிவராத்திரி விழாவிற்கு வந்தாலே கூட்டம் அமோகமாக கூடும். கரன்சிகளை அள்ளலாம் என்று ஜக்கி திட்டம் தீட்டினார்.

இதற்காக நயன்தாரா தரப்பை ஜக்கியின் ஆட்கள் அணுகினார்கள். நயனோ, 'என்னால் இந்த விழாவில் கலந்துகொள்ள முடியாது. நான் கேரளா திருவல்லா சிரியன் கிறிஸ்தவத்தைச் சேர்ந்தவள் என்றாலும், எந்த மத நிகழ்ச்சியையும் தவிர்த்தது கிடையாது. தற்போது நடித்துக் கொண்டிருக்கும் 'மூக்குத்தி அம்மன்' படத்திற்காக, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் பிரசித்தி பெற்ற எல்லா கோவில்களுக்கும் போயிட்டேன். போய்க்கிட்டும் இருக்கேன். அதனால, வேறெந்த நிகழ்ச்சியிலும் இப்போதைக்கு கலந்துகொள்ள முடியாது' என்று மறுத்திருக்கிறார்.

இதைக்கேட்டு கடுப்பான ஜக்கி தரப்பு.. "நாங்க யார்ன்னு தெரியுமா? நாங்க கூப்பிட்டு வரமாட்டேன்னு சொல்ல எவ்வளவு தைரியம் வேணும்? பார்த்துக்கலாம்" என்று மிரட்டி இருக்கிறது. அதன் பிறகுதான், அடுத்த சாய்ஸாக 'டார்லிங்' படம் மூலம் தமிழில் அறிமுகமான நிக்கி கல்ராணியை தேர்வு செய்தார்கள். இவரும் ஜக்கியைப் போலவே கர்நாடகாவைச் சேர்ந்தவர். இந்துக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், கிறிஸ்தவ மிஷனரி பள்ளியில்தான் படித்தார். அதனால், கிறிஸ்தவத்தின் மேல் தனக்கிருக்கும் ஈர்ப்பைக் காரணம்காட்டி, அவரும் வர மறுத்திருக்கிறார். அவரை ஐ.டி. ரெய்டைக் காட்டி ஜக்கி தரப்பு மிரட்ட, வேறு வழியில்லாமல் ஈஷாவுக்குள் ஐக்கியமானார் நிக்கி. மத்திய அரசில் தங்களுக்குள்ள செல்வாக்கைக் காட்ட ஐ.டி.ரெய்டு என மிரட்டல் விடுவது சகஜமாகி விட்டது.


ஐ.டி.யைக் காட்டி நிக்கியை ஈஷா தரப்பு வளைத்ததுபோல, ஏன் நயன்தாராவை இழுக்கவில்லை என்று நாம் கேட்டபோது, "தன்னுடைய பவரைப் பயன்படுத்தி நயன்தாராவை ஐ.டி. ரெய்டில் சிக்க வைக்கலாம் என்று முதலில் ஈஷா கணக்குப் போட்டிருக்கிறது. ஆனால், சமீபத்தில் ரஜினியோடு நயன் ஜோடிபோட்ட 'தர்பார்' படம் வெளியானதால், அவரை மிரட்டும் வகையில் ஐ.டி.யை இதில் இழுத்துவிட்டால் ரஜினியின் மேலிட செல்வாக்கை எதிர்கொள்ள நேரிடலாம் என நயன் மீதான வேகத்தை கொஞ்சம் பிரேக் போட்டு வைக்கலாம் என்று ஈஷா தரப்பு முடிவு செய்திருக்கிறது'' என்கிறார்கள்.

''துணைக் குடியரசுத்தலைவர் வெங்கய்யா நாயுடு



நயன்தாரா






விழாவில்... நிக்கி கல்ராணி, காஜல்

தொடங்கிவைக்க, நடிகைகள் காஜல் அகர்வால், நிக்கி கல்ராணி ஆட்டம்போட, இந்த ஆண்டு சிவராத்திரியில் ஜக்கி வாசுதேவின் ஆட்டம் வழக்கத்தை விடவும் கூடுதலாகவே இருந்தது. அதற்கு முக்கிய காரணம் ஒன்று இருக்கிறது" என்கிறார்கள் சமூக ஆர்வலர்கள்.

இதுபற்றி விரிவாக நம்மிடம் பேசிய வழக்கறிஞரும், சமூக ஆர்வலருமான பன்னீர் செல்வம், "இந்த மகா சிவராத்திரி விழா நடப்பதற்கு சில தினங்களுக்கு முன்பாக, முதல்வர் எடப்பாடி பழனிசாமியும், துணைமுதல்வர் ஓ.பி.எஸ்.சும், அரசு முதன்மைச் செயலாளர்

Feb 26-2020-RIL

www.nakkheeran.in



ஜக்கியை குஷிப்படுத்திய அந்த அரசாணை

ராஜேஷ் லக்கானியை வைத்து நகர் ஊரமைப்பு இயக்குனருக்கு ஒரு அரசாணையை சத்தமில்லாமல் அனுப்பினார்கள்.

அந்த அரசாணையில், 'அரசாங்கத்தின் அனுமதிபெற்ற மலைப்பகுதி இல்லாத இடங்களில், நகர் ஊரமைப்புத் துறையின் கூட்டு உள்ளூர் திட்டக் குழுமத்திற்கும், புறநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலாளர்களுக்கும், மண்டல இணை இயக்குனருக்கும், நகர் ஊரமைப்பு இயக்குனருக்கும் எப்படி கட்டடங்கள் கட்டிக்கொள்ள அனுமதி வழங்கப் படுகிறதோ, அதேபோல மலைப்பகுதிகளில் கட்டப்படும் கட்டடங்களுக்கும் சீக்கிரம் அனுமதி வழங்கப்படும். அப்படி மலையிடத்தில் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கும் அதிகாரம் உள்ள மலையிடப் பாதுகாப்புக் குழுவான HACAவின் அதிகாரமும் பகிர்ந்தளிக் கப்படுகிறது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம், மலைப்பகுதியில் கட்டடம் கட்ட, மாவட்ட அதிகாரிகள் மூலம் எல்லா அனுமதியையும் பெற்றுவிடலாம் எனும்போது, ஏற்கனவே அனுமதி இல்லாமல் கட்டடங்களை கட்டியெழுப்பி இருக்கும் ஈஷாவுக்கு இது உற்சாகம் தரும் அறிவிப்புதானே?

இது மட்டுமா? 15 ஆயிரம் சதுர அடிக்கு மேல் போனால் மட்டுமே HACA அனுமதி வாங்கவேண்டும் என்பதைக் கேட்டாலே நெஞ்சு பதறுகிறது. காரணம், அதே அரசாணையில், 'அரசின் முழுமைத் திட்டம் உள்ள மலை இடங்களில் கனிம, வேளாண் பொறியியல் துறை அதிகாரிகள், மாவட்ட வன அலுவலர், வனத்துறை தலைவர் உள்ளிட்டோரிடம் அனுமதி கேட்டு, ஒரு மாதத்திற்குள் கிடைக்கவில்லை என்றால், அவர்கள் அனுமதி கொடுத்ததாக எடுத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இன்னும் அதிமுக்கியமாக, முழுமைத் திட்டம் இல்லாத மலை இடங்களில் நடைமுறைக்கு உட்பட்டு கட்டிடங்கள் கட்ட அனுமதி வழங்கவேண்டும் என்று சொன்னவர்கள், நகர்ப்புற பகுதிகளில் உள்ள மனையிடங்களுக்கு ஒரு ஹெக்டேர், ஊரகப்பகுதியில் இரண்டு ஹெக்டேருக்கு அதிகமாகும் பட்சத்தில் HACAவிடம் அனுமதி வாங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர். இதில்தான் ஈஷாவின் வேலைத் திட்டமே அடங்கியிருக்கிறது.

அதாவது, HACAவின் அனுமதியை யானை வழித்தடங்கள் இருக்கும் காட்டுக்குள்தான் பெறவேண்டும். அப்படி இருக்கையில், நகர்ப்புறத்தில் இருக்கும் மனையிடங்களுக்கு HACA அனுமதி கொடுக்க வேண்டிய அவசியம் எங்கிருந்து வந்தது? ஆக, ஈஷாவுக்காக எல்லா விதிமுறைகளையும் தளர்த்திக் கொடுத்து தங்களது விசுவாசத்தைக் காட்டியிருக்கிறார்கள் ஆட்சியாளர்கள்.

முழுக்க முழுக்க மலை வாழ்விடப் பகுதிகளுக்கு எதிரான இந்த அரசாணையை ரத்து செய்யக்கோரி, பழங்குடியின சங்கத் தலைவியான முத்தம்மாள் மூலம் வழக்குத் தொடரப் போகிறோம். மக்களும், வன விலங்குகளும் வெல்வார்கள்" என்றார் நம்பிக்கையுடன்.

இதற்கிடையில், இந்துத்வ மேடைகளில் அடிக்கடி தலைகாட்டும் அ.தி.மு.க.வின் ஒரே மக்களவை எம்.பி. ஓ.பி.ரவீந்திரநாத் குமார் ஈஷாவின் சிவராத்திரி இரவில் தென்பட்டார். அங்கே ஜக்கியின் கால்களைத் தொட்டுத் தழுவிய ஓ.பி.ஆர்., மோடியிடம் பேசி எனக்கொரு மினிஸ்டர் பதவியை வாங்கிக் கொடுங்கள் எனக் கேட்டிருக்கிறார். இதற்கு ஜக்கியிடம் இருந்து கிரீன் சிக்னல் வர, உற்சாகமாக சிவராத்திரியை அங்கு கழித்திருக்கிறார் ஓ.பி.ரவீந்திரநாத்.



பன்னீர் செல்வம்

—அ.அருள்குமார், மணிகண்டன்


Feb 26-2020-RIL

குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிரான போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு டெல்லியில் வன்முறை -இருவர் பலி

# ஆன்மிக

## கேள்வி-பதில்கள்

இந்துக் கடவுளர்களர்கள் வழிபாட்டு முறைகள்
தீராத பிரச்சினைகளுக்குப் பரிகாரங்கள்
வாஸ்து என இந்து வாழ்க்கை முறைக்கு
அவசியமான கேள்வி – பதில்கள்




திருமதி வெற்றிச்செல்வி

Feb 26-2020-RIL



# மாவலி பதில்கள்



ரக்பி மைதானத்தில் குவாடன்

**மா.சந்திரசேகர், மேட்டுமகாதானபுரம்**

**'மத்தியபிரதேச காங்கிரஸ் அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் நானே வீதியில் இறங்கிப் போராடுவேன்' என்கிறாரே அதே கட்சியின் ஜோதிராதித்ய சிந்தியா?**

ஜூனியர் சிந்தியா எதிர்பார்த்த முதல்வர் பதவி, சீனியர் கமல்நாத் வசம் சென்றுவிட்டது. அதனால் சொந்தக் கட்சியின் ஆட்சிக்கெதிராகவே போராடவும் அதற்கு மக்கள் பிரச்சினைகளை காரணமாக காட்டவும் தயாராகிறார் சிந்தியா. பா.ஜ.க.வுக்கு காங்கிரஸ் எதிரி. காங்கிரசுக்கு காங்கிரஸ்காரர்களே எதிரி. இத்தனை படுதோல்விகளுக்குப் பிறகும் நிலைமை மாறவேயில்லை.

**ஜெயசீலன், அயனாவரம், சென்னை**

**டெல்லியில் இரண்டு பெரிய கட்சிகளை வீழ்த்தி கெஜ்ரிவால் ஜெயித்ததுபோல தமிழ்நாட்டில் ஜெயித்து ஆட்சியைப் பிடித்துவிடலாம் என ரஜினி நினைப்பதில் தவறென்ன?**

பா.ஜ.க.-காங்கிரஸ் இரண்டு கட்சிகளுக்கும் மாற்றாக ஆம்ஆத்மி என்ற தனிக் கட்சியை ஆரம்பித்தார் கெஜ்ரிவால். அதன்பிறகு, ஊழலை எதிர்ப்பதும்-வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதுமே தனது அரசியல் என்பதை முன்னிறுத்தி

உங்கள் உதடுகள் மூடிக்கொள்ளட்டும் உங்கள் மனம் திறந்துகொள்ளட்டும் -விவேகானந்தர்



www.nakkheeran.in

வாக்கு கேட்டு, மூன்று முறை முதல்வராகப் பதவியேற்றுவிட்டார். ஆன்மிக அரசியல் என்ற கொள்கையை முன்கூட்டியே அறிவித்துவிட்ட ரஜினி, தனிக்கட்சி தொடங்கப் போவதாக அறிவித்து மூன்றாண்டுகள் ஆகப்போகிறது.

**ஹரிணி, புதுப்பேட்டை, சென்னை**

**வாழ்க்கை என்பது என்ன?**

தளராத நம்பிக்கை. ஆஸ்திரேலிய நாட்டின் பிரிஸ்பேன் நகரில் வசிக்கின்ற 9-வயது சிறுவன் குவாடன் பேல்ஸ், போதிய உடல் வளர்ச்சி இல்லாதவர். பள்ளியில் சக மாணவர்களின் கிண்டல் கேலியால் மனம் உடைந்து, தற்கொலை செய்துகொள்ளும் முடிவுடன், தூக்குக் கயிறு கேட்டு தன் தாயிடம் கெஞ்சிக் கதறும் காட்சி இணைய தளத்தில் பரவியது. பலரது நெஞ்சையும் உலுக்கிய இந்த வீடியோவை பிரபலங்களும் பார்த்தனர். இதையடுத்து, சிறுவனுக்கு ஆதரவாக பல நாடுகளிலிருந்தும் குரல்கள் ஒலித்தன. ஆஸ்திரேலிய ரக்பி விளையாட்டு சாம்பியன்ஷிப் போட்டியைத் தொடங்கி வைக்கும் வகையில் 'ஆல் ஸ்டார்ஸ்' அணியின் கேப்டன் ஜோயல் தாம்சனின் விரல்களை ஒரு கையால் பிடித்துக்கொண்டு இன்னொரு கையால் ரக்பி பந்தையும் ஏந்தியபடி மைதானத்துக்கு குவாடன் வந்தபோது எழுந்த கரவொலி, வாழ்க்கையின் அர்த்தத்தை உணர்த்தியது. குவாடன் போலவே வளர்ச்சி குன்றிய ஹாலிவுட் நடிகர் பிராட் வில்லியம்சும் சிறுவனுக்காக 3 லட்சம் டாலருக்கு மேல் நிதி சேர்த்திருக்கிறார்.

**கே.ஆர்.ஜி.ஸ்ரீராமன், பெங்களூரு**

**ஓ.பி.எஸ். உள்ளிட்ட 11 எம்.எல்.ஏ.க்களின் தகுதி நீக்கம் குறித்து சபாநாயகரே முடிவெடுக்கலாம் என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதே?**

11 எம்.எல்.ஏ.க்கள் விவகாரத்தில் எப்போது முடிவெடுப்பது என்பதை வலியுறுத்தும் அதிகாரம் உச்சநீதிமன்றத்திடம் இல்லை. ராதாபுரம் தொகுதி மறுவாக்கு எண்ணிக்கைக்குப் பிறகு யார் எம்.எல்.ஏ. என்பதை அறிவிப்பதிலும் உச்சநீதிமன்றம் வேகமாக இல்லை.

## தமிழ்

**(வரலாற்றைத் தேடு காலப் பயணம்)**

**சி.கார்த்திகேயன், சாத்தூர்.**

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த தமிழகத்தில் பிற மொழிகளும் மதிக்கப்படுகிறதே?

தமிழ் நமக்கு தாய்மொழி. திராவிட மொழிக் குடும்பத்தில் உள்ள மொழிகளுக்கெல்லாம் தாயாக உள்ள மொழி. தாய் எப்படி தன் நலத்தைவிட தன் குழந்தைகள் நலத்தைக் காப்பதில் அக்கறை செலுத்துவாரோ அது போல தமிழ் மொழியும் தன் நிலத்தில் பிற மொழிகளுக்கும் இடம் தருகிறது. காக்கைக் கூட்டில் வேறு பறவைகள் முட்டையிட்டாலும் காகம் அடை காப்பதுபோல, திராவிட மொழிக் குடும்பத்தைச் சாராத மொழிகளைப் பேசுவோரும் தமிழ்நாட்டில் வசதியாக வாழ்ந்து வருகின்றனர். அதே நேரத்தில், மத்திய அரசாங்கத்தின் துணையோடு ஆதிக்கம் செலுத்தும் இந்தியும் சமஸ்கிருதமும் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் பலவற்றையும் அழித்து வருகின்றன. ராஜஸ்தானி, போஜ்புரி, சந்தாலி, மைதிலி உள்ளிட்ட பல மொழிகள் இந்தி ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்டு, தங்கள் உரிமைக்காகப் போராடி வருகின்றன. வட மாநிலங்களில் வாழும் பழங்குடி மக்கள் பேசும் மொழிகளின் நிலை இன்னும் பரிதாபம். ஐ.நா.அவையின் யுனெஸ்கோ நிறுவனத்தால் வெளியிடப்பட்ட, அழிவின் விளிம்பில் உள்ள மொழிகளின் பட்டியலில் உள்ள ஒரு மொழி, 'அசுர்.'

பழங்குடி மக்கள் நிறைந்த ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள லட்டேகார்-கும்லா மாவட்டங்களில் வாழும் பழங்குடியினர் பேசும் 'அசுர்' மொழிக்கு எழுத்து வடிவம் கிடையாது. ஒலி வடிவம்தான். இந்த மொழி பேசும் மக்களின் எண்ணிக்கை 22ஆயிரம் பேர். அதிலும் 8000பேருக்கு மட்டும்தான் 'அசுர்' மொழி நன்றாகத் தெரிந்திருக்கிறது. மற்றவர்களை ஜார்கண்ட் மாநில அலுவல் மொழியான இந்தி ஈர்த்துவிட்டது. அதனால், 'அசுர்' முற்றிலும் அழிந்து போகும் நிலைமையை உணர்ந்த பழங்குடி இனப்பெண்மணியான சுஷ்மா 'அசுர்' என்பவர், தாய்மொழியைக் காக்கும் அமைப்பை உருவாக்கினார். மக்களிடம் மொழி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நடமாடும் வானொலியை உருவாக்கினார். 'அசுர்' மொழியில் பாட்டு, பேச்சு ஆகியவற்றை அந்த மக்கள் வாழும் இடங்களில் நடமாடும் வானொலி மூலம் ஒலிபரப்பி வருகிறார். அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. 'அசுர்' மக்களே வானொலி நிகழ்ச்சிகளில் பங்கேற்க ஆர்வம் காட்டுகின்றனர். ஆஸ்ட்ரோஆசியாடிக் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது 'அசுர்' மொழி என்கிறார்கள் வல்லுநர்கள். இதில் திராவிட மொழிகளிடமிருந்து கடன்பெற்ற நிறைய சொற்கள் இருப்பதாகவும் சொல்கிறார்கள். 'அசுர்' போல ஆகாமல் தமிழ் தன்னையும் காத்து, தன்னை அண்டி வந்தவர்களையும் காத்து வருகிறது.



Feb 26-2020RIL

தமிழக சட்டமன்றத் தேர்தல் குறித்து மத்திய உளவுத் துறையான ஐ.பி.யிடம் ஒரு ரிப்போர்ட் கேட்டுள்ளார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. அவர்கள் தந்த ரிப்போர்ட்டில் தி.மு.க.வின் முதன்மைத் தலைவர்களான தி.மு.க. பொருளாளர் துரைமுருகன், முதன்மைச் செயலாளர் நேரு, துணை பொதுச்செயலாளர் ஐ.பெரியசாமி, திருவண்ணாமலை மா.செ. எ.வ.வேலு, விழுப்புரம் மா.செ. பொன்முடி, எம்.பி. ஆ.ராசா போன்றவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலைத் தந்து, 'இவர்களை தேர்தல் களத்தில் முடக்கினால் தேர்தலில் பாதி வெற்றி' என்றுள்ளது. அதனை பா.ஜ.க. தலைவர் ஜே.பி.நட்டா, தமிழக பா.ஜ.க. பொறுப்பாளர் முரளிதரராவ், மத்திய அமைச்சர்கள் பியூஷ்கோயல், நிர்மலா சீதாராமன் ஆகியோரிடம் தந்து, தேர்தல் குறித்து ஆலோசித்துள்ளனர்.

''ஆளும்கட்சியாக இருந்தாலும் ஜாக்கி இல்லாத குதிரையாக உள்ளது அ.தி.மு.க. தேர்தல் நேரத்தில் எடப்பாடி, ஓ.பி.எஸ். உத்தரவையெல்லாம் அவர்கள் கட்சியினர் மதிக்கமாட்டார்கள். இவர்களை தி.மு.க. தலைவர்கள் ஈஸியாக மடக்கி விடுவார்கள். அதனால் தி.மு.க. பிரமுகர்களை பார்த்து பயப்படாத, பணத்தை தாராளமாக இறைக்கக்கூடிய ஆட்களை நாம் களத்தில் இறக்கினால், தி.மு.க. தலைவர்களை அவர்கள் மாவட்டத்தில் முடக்கிவிடலாம், அப்படி செய்தால் பாதி வெற்றி என்றுள்ளார்கள்.

தி.மு.க. பொருளாளர் துரைமுருகனை எதிர்த்து, பா.ஜ.க.-அ.தி.மு.க. கூட்டணியில், பா.ஜ.க. சார்பாக தேர்தல் வேலை செய்வதற்காக, வேலூர் எம்.பி. தேர்தலில் துரைமுருகன் மகனிடம் தோற்றுப்போன ஏ.சி. சண்முகத்தை கேட்டுள்ளது பா.ஜ.க. 'நான் செலவு செய்கிறேன், எனக்கு மாநிலங்களவை எம்.பி. சீட் வேண்டும்' என அவர் கேட்டுள்ளாராம். திருவண்ணாமலையில் எ.வ.வேலுவை எதிர்க்க, சினிமா தயாரிப்பாளரும், ஃபைனான்ஸ் அதிபருமான தணிகைவேலை களமிறக்கலாமா என ஆலோசித்துள்ளது'' என்றார் உளவுத் துறையில் உள்ள முக்கிய அதிகாரி.

யார் இந்த தணிகைவேல்?

''திருவண்ணாமலையில் தி.மு.க. சார்பில் நகராட்சி சேர்மனாக, எம்.பி.யாக, எம்.எல்.ஏ.வாக இருந்தவர் முருகையன். அவரது நெருங்கிய உறவினர் தணிகைவேல். மத்திய அமைச்சராக செஞ்சி.ராமச்சந்திரன் இருந்தபோது, அவருடன் இருந்ததால் டெல்லி லாபியும் அத்துப்படி. இவர் மீது வைகோவுக்கு அதிருப்தி ஏற்பட்டதால் ம.தி.மு.க.வில் இருந்து நீக்கினார். பின்னர், தே.மு.தி.க.வில் இணைந்து பதவியைப் பெற கோடிகளை வாரியிறைத்தார். சில சிக்கல்களில் சிக்கிய தணிகைவேல், தே.மு.தி.க.வில் இருந்து விலகி தி.மு.க. மா.செ. எ.வ.வேலுவை சந்தித்து தி.மு.க.வில் இணைந்தார். லோக்கல் பாலிடிக்ஸால் விலகிக்கொண்டார். தற்போது பா.ஜ.க.வின் மேல்மட்ட தலைவர்கள் சிலரின் நட்பு பட்டியலுக்குள் சென்றுள்ளார். கடந்த 20 வருடங்களாக பணத்தை வாரி வழங்கி தனக்கென நகரத்தில் ஒரு இளைஞர் வட்டத்தினை உருவாக்கி வைத்துள்ளார்'' என்றார்கள் திருவண்ணாமலை அரசியலை அறிந்தவர்கள்.

தணிகைவேல் ஆதரவாளர்கள் ஒருவர் நம்மிடம், “கடந்த வாரத்தில் திருவண்ணாமலை வந்தார். திருவண்ணாமலை மாவட்டத்தில் எ.வ.வேலுவை எதிர்க்க எந்தக் கட்சியிலும் பிரமுகர்கள் இல்லையாம். அதனால் என்னை கட்சியில் இணைத்து 'அவருக்கு எதிராக அரசியல்




# தி.மு.க.வை முடக்
# தொழிலதிபர்கள்
–பா.ஜ.க

## நக்கீரனை சுட்டிக் காட்டிய ஸ்டாலின்!

மதுரையில் இராஜகண்ணப்பன் தி.மு.க.வில் இணைந்த பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் பேசிய தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், நக்கீரன் இதழ் அட்டைப் படச் செய்தியைச் சுட்டிக் காட்டிப் பேசினார்.

“ஜெயலலிதா பிறந்த தினத்தை பெண்கள் பாதுகாப்பு நாளாக அறிவித்திருக்கிறார் முதல்வர் எடப்பாடி. இந்த ஆட்சியில் பெண்கள் பாதுகாப்பு எந்த லட்சணத்தில் இருக்கிறது என்பதற்கு நக்கீரன் பத்திரிகையில் ஆதாரத்துடன் ஒரு செய்தி வந்திருக்கிறது. பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் முக்கியக் குற்றவாளியான திருநாவுக்கரசு குடும்பத்தார் மத்தியில் ஒரு செய்தி ரகசியமாக பகிரப்பட்டு வருகிறது. அதாவது திருநாவுக்கரசின் அப்பா, சிறையில் இருக்கும் என் மகன் சில வீடியோக்கள் இருக்கும் இடத்தைச் சொன்னான். நான் அதை எடுத்துக் கொண்டு போய், அதில் தொடர்புடைய வி.ஐ.பி.க்களிடம் காட்டினேன். பயந்து போன அவர்கள் லட்சக்கணக்கில் பணம் தந்தார்கள், சோர்ந்து போன என் குடும்பம் நிமிர்ந்தது. டெல்லியில் மத்திய மந்திரிகளிடமும் சி.பி.ஐ.யைக் கையாளும் அமித்ஷாவிடமும் பேசும் அளவிற்கு இருக்கும் ஒரு வி.ஐ.பி.யின் மகன் அந்த வீடியோவில் சிக்கியிருக்கிறான். நான் அந்த வீடியோவைப் பற்றி பேச ஆரம்பித்ததும் பொள்ளாச்சி, திருப்பூர், கோவை, சென்னை தலைமைச் செயலகம் வரை அதிர்ந்தது” என நக்கீரன் செய்தியை வரிக்கு வரி வாசித்துப் பேசினார் ஸ்டாலின்.

-அண்ணல்

செய்யுங்கள்’ என பா.ஜ.க. மேல்மட்டத்தில் கேட்கிறார்கள். நானும் பா.ஜ.க.வில் சேர முடிவு செய்துள்ளேன், 5 ஆயிரம் பேரோடு அங்கு போனால்தான் எனக்கு மரியாதை. நீங்கள் என்னுடன் வரவேண்டும் எனக் கேட்டார்” என்றார்கள்.

இதுகுறித்து தணிகைவேல் கருத்தறிய அவரை செல்போனில் தொடர்புகொண்டு பேசியபோது, “பா.ஜ.க.வில் நான் சேரப்போவது உண்மைதான். நிதியமைச்சர் நிர்மலா மேடம் முன்னிலையில் இணைகிறேன். யாரையும் எதிர்க்க வில்லை, தலைமை என்ன சொல்கிறதோ அதைச் செய்யப்போகிறேன்” என்றார்.

Feb-26-2020-RIL

இதுபற்றி டெல்லியுடன் நேரடித் தொடர்புடைய பாஜக.பிரமுகர் ஒருவருடன் நாம் பேசிய போது, ‘இன்னும் கட்சியில் சேராத தணிகைவேலை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கிறார்களா என தெரியாது’ என்றவர், “திருவண்ணாமலையை சேர்ந்த தி.மு.க.



தணிகைவேல்

பிரமுகர் ஒருவரின் மகள் ஐதராபாத்தில் செட்டிலாகியுள்ளார். அவர் சமீபத்தில் தமிழக பா.ஜ.க. பொறுப்பாளர் முரளிதரராவை சந்தித்து பா.ஜ.க.வில் இணைந்தார். அந்தப் பெண்மணி மூலமாக முரளிதரராவ் வட்டத்துடன் நெருங்கி, அங்கிருந்து நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வட்டத்தில் இணைந்து டெல்லியில் தணிகைவேல் லாபி செய்கிறார் என்கிற தகவல் எங்களுக்கு கிடைத்தது” என்றார். கூடுதலாக, “சட்டமன்றத் தேர்தலில் தமிழகத்தில் பா.ஜ.க.வின் வெற்றிக்காக தமிழகம் முழுவதும் 11 தொழிலதிபர்களை செலவு செய்யச்சொல்லி உத்தரவிட்டுள்ளது எங்கள் கட்சி தலைமை. அதில் 4 கல்வி நிறுவனங்களின் அதிபர்கள் உட்பட 11 பேர் அடக்கம். அதில் சிலர் நேரடி அரசியலிலும் இறங்குவர், மற்றவர்கள் பண உதவி மட்டும் செய்யவுள்ளார்கள்” என்றார்.

-து. ராஜா




மதுரையில்...

www.nakkheeran.in

டூரிங் டாக்கீஸ்!

# பெரியார் மொழி பேசும் போஸ் வெங்கட்!

**'மெட்டி ஒலி' தொலைக்காட்சித் தொடர் மூலம் தமிழக இல்லங்களிலும் இதயங்களிலும் இடம் பிடித்த போஸ் வெங்கட், பின்னர் வெள்ளித்திரையிலும் ஜொலித்தார். நடிகராக தடம் பதித்த வெங்கட், தான் விரும்பிய சினிமாவில் இயக்குனராக அடுத்த அடியை எடுத்து வைத்துள்ளார். போஸ் வெங்கட் இயக்கிய படமென்றதும் நமக்கு என்ன எதிர்பார்ப்பு இருக்கும்? ஒரு குடும்பப்படம் என்ற எதிர்பார்ப்பு இருக்கும். 'கன்னி மாடம்' என்ற தலைப்பைப் பார்த்ததும் எதிர்பார்ப்புகள் கொஞ்சம் மாறலாம். ஆனால், முதல் காட்சியிலிருந்தே ஆச்சரியம் தருகிறார் போஸ் வெங்கட்.**

Feb 26-2020-RL

"என்னய்யா... உங்க ஆட்டோ ஸ்டாண்டு போர்டுல எல்லார் பேர்லயும் தலைவர்னு போட்டுருக்கு?" என்று ஒருவர் கேட்க "இது பெரியார் ஆட்டோ ஸ்டாண்டு, இங்க எல்லாரும் தலைவர்தான்" என்கிறார் ஆட்டோ ஓட்டுனர். தொடக்கத்திலிருந்து இறுதிவரை முற்போக்குக் கருத்துகளை, திராவிட சிந்தனையை, எளிய மக்களின் வாழ்க்கையை படமாக உருவாக்கியுள்ளார் போஸ் வெங்கட். இதிலென்ன ஸ்பெஷல் என்றால் எந்தக் கருத்தும் பிரச்சாரமாகவோ அலுப்பூட்டும் வசனங்களாகவோ, குறிப்பிட்ட சமூகங்களின் மீதான வன்மமாகவோ இல்லாமல் கதையாகவும், சுவாரசியமான காட்சிகளாகவும் இருப்பதுதான். 'இந்த காலத்திலுமா சாதி பாக்குறாங்க?' என்று படத்திலேயே ஒரு கதாபாத்திரம் கேட்க, அதற்கு பதிலாக தன் படத்தையே தந்திருக்கிறார் போஸ்.

பெற்ற பிள்ளையின் மீதான பாசத்தை விட சாதி ஆணவம் மேலோங்கி நிற்கும் தந்தைகளும், தாங்கள் அனுமதித்து ஆசிர்வதிக்க விரும்பினாலும் சுற்றி நின்று நெரிக்கும் சாதிக்கு அடிபணிந்து போகும் தந்தைகளும் இன்னும் இருக்கிறார்கள் என்பதை உண்மை உறைக்கும் விதமாக அழுத்தத்துடன் கூறியிருக்கிறது 'கன்னி மாடம்'. "நாம உசந்த சாதின்னாலும் எண்ணிக்கையில கம்மியா இருக்கோம். அதுனால நாம ஒட்டி இருந்தாதான் நமக்கு நல்லது" என்று உறவினருக்கு அட்வைஸ் செய்யும் சாதிப் பற்றுடைய தந்தை, தங்கள்



'கன்னி மாடம்' படத்தில்...

**சந்தேகத்தைப் போல விரைவில் வளரும் விருட்சம் வேறு இல்லை -காண்டேகர்**

தொகுதி எம்.எல்.ஏவாகவே இருந்தாலும் தங்களை விட குறைவு என்று கருதப்படும் சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் அவரது மகனுக்கு பெண் கொடுக்க மறுக்கிறார். ஆனால் அவரது மகளோ எம்.எல்.ஏ.வின் சமூகத்தை சேர்ந்த இன்னொரு இளைஞனை காதலித்து, குடும்பத்துக்குத் தெரியாமல் வெளியேறி திருமணம் செய்துகொண்டு வாழ, குடும்பத்தில் பூகம்பம் உண்டாகிறது. அவளது தாய் தற்கொலைக்கு முயன்று கோமாவுக்கு செல்கிறார். கோபம், வெறியாக மாற தனது மகளையும் அவளது கணவனையும் கொலை செய்துவிட்டு சிறை செல்கிறார் தந்தை. குடும்பமே சிதைந்து போக, அவரது மகன் சென்னை வந்து ஆட்டோ ஓட்டுனராகிறான். 'பெரியார் ஆட்டோ ஸ்டாண்'டில் உறுப்பினராகி சாதியை விட சகமனிதனே மேல் என்னும் மனநிலையோடு வாழ்கிறான் நாயகன் அன்பு.

அந்த சமயத்தில் மதுரை பக்கமிருந்து ஆதிக்க சாதியை சேர்ந்த ஒரு பணக்கார இளைஞன், ஒடுக்கப்பட்ட சாதியை சேர்ந்த ஒரு ஏழைப் பெண்ணை காதல் செய்து அவளுடன் வாழ்வதற்காக அழைத்துக்கொண்டு சென்னை வருகிறான். அவர்களுக்கு உதவியாக இருக்கிறான் அன்பு. திடீரென அவர்களை கொல்ல வேண்டுமென்ற வெறியோடு அவனது குடும்பத்தினர் தேட, இருவரும் எளிமையாகவும் மகிழ்ச்சியாகவும் தங்கள் வாழ்க்கையை தொடங்குகின்றனர். காலம் அப்படியே செல்லுமா? திடீரென ஒரு விபத்தில் அந்த இளைஞன் உயிரிழக்க, அந்தப் பெண் தனித்து நிற்கிறாள். அவளுக்கு ஒரு கண்ணியமான துணையாகிறான் அன்பு. ஆனாலும் சாதி உணர்வு சும்மா இருக்குமா? சிறையில் இருந்து பரோலில் வரும் தந்தை மீண்டும் ஒரு வெறியாட்டம் ஆட 'சாதி மனிதனை சாக்கடையாக்கும்' என சொல்லி முடிகிறது படம்.

'கன்னி மாட'த்தில் பல முற்போக்கான பாத்திரங்களையும் காட்சிகளையும் போகிற போக்கில் காட்டி மகிழ்விக்கிறார் போஸ் வெங்கட். ஆண்களோடு ஆண்களாக ஆட்டோ ஓட்டும் அந்தப் பெண், அவளுடனான சக ஆட்டோ ஓட்டுனர்களின் நட்பு, தன் மீது அன்பு கொண்டவரை அவரது தோற்றம் குறித்து கவலை கொள்ளாமல் திருமணம் செய்ய எடுக்கும் முடிவு, மத பேதம் இல்லாமல் ஒருவரின் தெய்வத்துக்கு இன்னொருவர் தரும் மதிப்பு என ஒரு சின்ன கனவு சமூகத்தை கண் முன் நிறுத்தியிருக்கிறார் போஸ்.

மிகப்பெரும் போராட்டத்திற்குப் பிறகு நடிகராக வெற்றி பெற்றவர் போஸ் வெங்கட். இன்று இயக்குனராகவும் அதே போராட்டம் இருந்திருக்கும். அப்படி பெற்ற ஒரு வாய்ப்பை, முற்போக்குக் கருத்துகளை, பெரியாரின் சிந்தனையை, மக்கள் ரசிக்கும்படி சொல்லப் பயன்படுத்திய போஸ் வெங்கட்டுக்கு ஒரு சல்யூட்.

-வீபீகே



போஸ் வெங்கட்

Feb 26-2020-RJL

# தமிழுக்கும் இளைஞர்களுக்கும் பாடுபட்டவர்!

## –சிவந்தி ஆதித்தனார் மணிமண்டப நெகிழ்ச்சி!

'இளைஞர்கள் படிக்க வேண்டும். அப்போதுதான் சமுதாயமும், நாடும் முன்னேற்றம் அடையும். எந்த ஊரில் பள்ளிக்கூடம் இல்லையோ அந்த ஊரில் பள்ளிக்கூடம் கட்டிக்கொடுக்க நான் தயாராக இருக்கிறேன்' என்று கூறியதோடு அல்லாமல், அதை செயல்படுத்தவும் செய்தவர் 'தினத்தந்தி' அதிபர், மறைந்த சிவந்தி ஆதித்தனார். திருச்செந்தூர் வீரபாண்டி பட்டணத்தில் கடந்த பிப்.22-ல் நடந்த அவரின் மணிமண்டப திறப்பு விழாவில் திரும்பிய பக்கமெல்லாம் இளைஞர்கள் கூட்டம் நிரம்பியிருந்தது.

தமிழ்நாடு முழுவதும் ஏராளமான இடங்களில் புதிய பள்ளிக்கூடங்கள் அமைக்கவும், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகளுக்கு கட்டடங்கள் கட்டவும் நிதி உதவி செய்தவர் சிவந்தி ஆதித்தனார். அதுமட்டுமல்ல, தென்மாவட்டத்தில் கபடி வீரர்களை தேடிப்பிடித்து அவர்களை ஊக்குவித்து பல போட்டிகளில் இந்தியாவின் சார்பாக களமிறக்கினார். "அகில இந்திய கராத்தே பெடரேஷன் நிறுவன தலைவரான இவர், எங்களைப்போன்ற கபடி பிளேயர்களின் படிப்பு எந்த வகையிலும் பாதிப்படையக்கூடாது என்பதற்காக பொறியியல் கல்லூரி, கல்வியியல் கல்லூரி தொடங்கி வாய்ப்பளித்தார்" என்கிறார் கோடக நல்லூரை சேர்ந்த கபடி வீரர் ஒருவர். ஆன்மிகப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர், தென்காசி காசி விஸ்வநாதர் கோவில் கோபுரத்தை கட்டிக் கொடுத்து, 'இரண்டாம் பராக்கிரம பாண்டியன்' என்றே அந்த பகுதி மக்களால் அழைக்கப்படுகிறார்.

தமிழுக்கும், விளையாட்டிற்கும், வேலை வாய்ப்பிற்கும், கல்விக்கும் வழிகாட்டிய சிவந்தி ஆதித்தனாரின் மணிமண்டபம் மற்றும் உருவச் சிலையினை திறந்து வைத்துப் பேசிய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, "எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தை தொடங்கியபோது, திருச்சி பாப்பாக்குறிச்சியில் தன் தந்தை சி.பா.ஆதித்தனார் பெயரில் சத்துணவுக் கூடத்தை கட்டிக்கொடுத்தவர் சிவந்தி ஆதித்தனார். கல்வி வளர்ச்சியில் காட்டிய அதே அக்கறையை விளையாட்டுத்துறை வளர்ச்சியிலும் காட்டினார். தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கம், சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் பல விருதுகளைப் பெற்று இந்தியாவுக்கு பெருமை தேடித் தந்தவர். இலக்கியம் மற்றும் கல்வித்துறையில் சிறந்த சேவை புரிந்ததற்காக அவருக்கு கடந்த 2008-ல் மத்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கியது கவுரவமே" என்றார்.

சிவந்தி ஆதித்தனாரின் நற்பணிகளை போற்றும் வகையில்தான் தமிழக அரசு சார்பில் அவருக்கு ஒரு கோடியே 34 லட்சத்து 28 ஆயிரம் செலவில் மணிமண்டபம் அமைத்துள்ளது.

இனிய தமிழை எளியநடையில் வழங்குகிற தினத்தந்தி நாளிதழை தொடங்கி பாமரனையும் படிக்க வைத்த சி.பா.ஆதித்தனாரின் மகனான சிவந்தி ஆதித்தனார், தனது நற்பணிகளால் கடல் கொஞ்சும் திருச்செந்தூரில் இறவாப் புகழோடு சிலையாக நிற்கின்றார்.

–நாகேந்திரன்



மணிமண்டப திறப்பு விழாவில்...

Feb 26-2020 RIL



Feb 26-2020-RIL



பாண்டித்துரை



பட்டறை சுரேஷ்



கருவாடு மாரியப்பன்

# ஆபரேஷன் சக்ஸஸ் ஆனால்...? வில்லங்கமாகும் நகைக் கொள்ளை விவகாரம்!

கடந்த 06-11-2019 அன்று நெல்லை மாவட்டத்தின் தொழில் நகரமான வி.கே.புரத்தில் காலையிலேயே பரபரப்பு தீ பற்றிக்கொண்டது. அங்குள்ள ரத்னா ஜுவல்லரி கடையின் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு நகைகள் கொள்ளை போனதுதான் பரபரப்புக்குக் காரணம்.

600 கிராம் தங்கநகையும் 30 கிலோ வெள்ளிச்சாமான்களும் கொள்ளையடிக்கப்பட்டதாக பேச்சுக் கிளம்பினாலும் இறுதியாக எப்.ஐ.ஆர். படி கொள்ளையடிக்கப்பட்டது 600 கிராம் தங்கநகைகள், நான்கு கிலோ வெள்ளிச்சாமான்கள் என்று மட்டுமே பதிவுசெய்யப்பட்டது.

கொள்ளையடித்தவர்கள், முன்னெச்சரிக்கையாக நகைக்கடையில் பொருத்தப்பட்டிருந்த டிவி. புட்டேஜ், சி.வி.ஆரையும் எடுத்துச்சென்றதால் தடயமும், ஆதாரமும் கிடைக்காமல் ஆய்வாளர் ராஜகுமாரியின் தலைமையிலான இன்ஸ்வெஸ்டிகேசன் டீம் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க அலைபாய்ந்தது.

ஒரு மாதத்திற்கும் மேலாக கொள்ளை பற்றிய துப்புத் துலங்காத நிலையில் பூட்டு உடைப்புக் கொள்ளையில் கைதேர்ந்தவர்களான சுள்ளான் சுரேஷ், பட்டறை சுரேஷ் தரப்பிலிருந்தே கொள்ளைநடந்ததாக வி.கே.புரம் காவல் நிலையத்துக்கு துப்பொன்று கிடைத்தது. ரத்னா ஜுவல்லரியின் கொள்ளையில் தொடர்புடைய, பாண்டித்துரை, கருவாடு மாரியப்பன் இருவரும் அம்பையிலுள்ள தனியார் பேங்க் ஒன்றில் பணம் எடுப்பதற்காக வருகிறார்கள் என்று கிடைத்த தகவலடிப்படையில் இன்ஸ் ராஜகுமாரியின் தலைமையிலான

Feb-26-2020-RJL



**உங்கள் கூடாரங்கள் பிரிந்திருக்கட்டும், ஆனால் உங்கள் இதயங்கள் சேர்ந்திருக்கட்டும்**
**-கலீல் ஜிப்ரான்**

தனிப்படை அவர்களை மடக்கி காவல் நிலையம் கொண்டுவந்தது.

தொடர்ந்து அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில், கொள்ளையடிக் கப்பட்ட நகைகளை மீட்பதற்காக பிடிபட்டவர் களோடு இன்ஸ் ராஜகுமாரி உள்ளிட்ட தனிப்படையினர் நாமக்கல்லுக்கு விரைந்தனர். வி.கே.புரம் காவல் நிலைய ரைட்டரான வின்செண்ட், ராஜகுமாரியின் கணவர் ஆகியோரை கூட்டிச்சென்றது தனிப்படையைத் திகைக்க வைத்திருக்கிறதாம்.

சிக்கியவர்களின் தகவலடிப்படையில் நாமக்கல்லில் நகையை மீட்டுக்கொண்டு வரும் சமயம், குற்றவாளிகளோடு ரைட்டர் வின்செண்ட் வந்த வாகனம் விபத்தில் சிக்கிக்கொள்ள, அதில் ரைட்டர் வின்செண்டின் கால் ஒடிந்திருக்கிறது. அந்த விபத்தின்போது மீட்கப்பட்ட நகைகளில் சில கீழே விழுந்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. அதேசமயம் நாமக்கல்லில் நடந்த இந்த விபத்து பற்றி அங்கே வழக்கும் பதிவு செய்யப்படவில்லை.

இது ஒருபுறமிருக்க நகைக்கடைக் கொள்ளையில் தொடர்புடைய சுள்ளான் சுரேஷும், பட்டறை சுரேஷும் அந்தக் கொள்ளைக்குப் பின்பு கடந்த 2019 நவம்பரில் கேரளாவின் திருச்சூரில் கொள்ளையில் ஈடுபட்டிருக்கிறார்கள். கடந்த ஜனவரிமாதக் கடைசியில் மதுரையிலுள்ள ஒரு கார் விற்பனைக் கடைக்கு அவர்களிருவரும் வரும் சமயம் கேரள காவல்துறை மடக்கியதில் பட்டறை சுரேஷ் மட்டும் சிக்க, கூட்டாளி சுள்ளான் சுரேஷ் தப்பியிருக்கிறான்.

மீட்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது 250 கிராம் தங்க நகைகள் மட்டுமே. மீதமுள்ள நகைகள் என்னவானது?

குற்றவாளிகளான பாண்டித்துரையும் கருவாடு மாரியப்பனும், வங்கியிலுள்ள தங்கள் கணக்கிலிருந்து 2 லட்சம் எடுத்து வரும்போது அங்கேயே தனிப்படையால் மடக்கப்பட்டுள்ளனர். அந்தப் பணம் என்னவானது? குற்றவாளிகள் கொள்ளையடிக்க வந்த வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது எங்கே?

நகைக் கொள்ளையில் தொடர்புடைய பட்டறை சுரேஷ் கேரள போலீஸ் வசம் சிக்கியபோதிலும், அவனைக் கஸ்டடி எடுத்து விசாரிக்க இன்ஸ் ராஜகுமாரி ஏன் முயற்சிக்க வில்லை?

இதுகுறித்து விவரங்கள் அறியும்பொருட்டு வி.கே.புரம் இன்ஸ்பெக்டர் ராஜகுமாரியைத் தொடர்புகொண்டபோது, “ஆமாம் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்” என்றவரிடம் 250 கிராம் நகை மட்டுமே ரெகவரி செய்யப்பட்டதைப் பற்றிச் சொன்னதும், சற்று நேரம் யோசித்தவர், ‘‘உங்களுக்கு யார் சொன்னார்கள்'' என்று கேட்டவர், “எனக்கு அவசர கால்கள் வந்து கொண்டிருக்கின்றன. நிறைய வேலைகள் கிடக்கிறது. மற்றவைகளை மீட்க முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்'' என்றபடி அவசரமாக லைனை துண்டித்துக்கொண்டார். பின் அவர் நமது லைனில் வரவே இல்லை.

இதுகுறித்து சரக டி.ஐ.ஜி. பிரவீன்குமார் அபிநவிடம் தெரிவித்தபோது... பொறுமையாக அனைத்தையும் கேட்டவர், “உடனே விசாரித்து நடவடிக்கை எடுக்கிறேன்” என்றார்.

-பரமசிவன்

Feb 26-2020-RK

**Statement about ownership of 'NAKKHEERAN' Tamil Bi-weekly**
**Form IV (see rule 8)**

| | |
|---|---|
| 1. Place of Publication | : Chennai |
| 2. Periodically of its Publications | : **Bi-Weekly** |
| 3. Printer's Name (Whether Citizen of India) (if foreigner State the Country of origin) | : Nakkheeran Gopal Yes |
| Address | : Nakkheeran Printers&Binders 105, Jani Jahan Khan Road, Royapettah, Chennai-600014. |
| 4. Publisher's Name (Whether Citizen of India) (if foreigner State the Country of origin) | : Nakkheeran Gopal Yes |
| Address | : Nakkheeran Publications 105, Jani Jahan Khan Road, Royapettah, Chennai-600014. |
| 5. Editor's Name (Whether citizen of India) (if foreign State the Country of origin) | : Nakkheeran Gopal Yes |
| Address | : Nakkheeran Publications 105, Jani Jahan Khan Road, Royapettah, Chennai-600014. |
| 6. Name and Address of Individual who own the news papers and partners of one percent of the total capital | : Nakkheeran Publications represented by Nakkheeran Gopal 105, Jani Jahan Khan Road, Royapettah,Chennai-600014. |

I, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

S/d Nakkheeran Gopal

Date : 29-02-2020 Signature of the publisher


டிக்டாக்கில் ராஜேஸ்வரி








கணவருடன்...

# ஆட்டுவிக்கும் TikTok போதை!

Ref-26-2020-RIL

## தத்தளிக்கும் குடும்ப உறவுகள்!

மது போதையினால் தகாத உறவுகள் ஏற்பட்டு சமூகம் சீரழிவது ஒரு பக்கம் இருக்க, அந்த போதைக்கு இணையாக இருக்கும் டிக்டாக் செயலியினாலும், தகாத உறவுகள் ஏற்பட்டு பல குடும்பங்கள் சீரழிகின்றன.

கொண்டாட்டம் என்ற பெயரில் துவங்கும் டிக்டாக் பெரும்பாலும் தகாத உறவுகளிலேயே முடிகிறது. இப்படி டிக்டாக் மூலம் பிரியாணி கடை ஊழியருடன் உருவான தகாத உறவினால் பெற்ற குழந்தைகளையே கொன்றுவிட்டு சிறையில் அடைபட்டிருக்கிறார் இளம்பெண் குன்றத்தூர் அபிராமி. இப்போது, அதே டிக்டாக்கினால் இளம்பெண் ராஜேஸ்வரி 25 வயதிலேயே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். எந்த முகம் அழகாக இருக்கிறது என்று டிக்டாக் வீடியோவில் மூழ்கிக் கிடந்தாரோ அதே முகம் இரும்புக்கம்பியாலும், குழவிக்கல்லினாலும் சிதைக்கப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்தார்.

தன் மனைவி இளைஞர்களுடன் காதல் கும்மாளம் போடும் 300 டிக்டாக் வீடியோக்களை பார்த்த ஆத்திரத்தில்தான் கணவனே ராஜேஸ்வரியை படுகொலை செய்திருக்கிறார். போலீசார் தீவிர விசாரணை செய்தனர். விசாரணையில் காடாம்புலியூரைச் சேர்ந்த வாடகை கார் ஓட்டும் டிரைவர் குமரவேலுவும் ராஜேஸ்வரியும் கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பு காதலித்து திருமணம் செய்துகொண்டுள்ளனர். சில ஆண்டுகள் காடாம்புலியூரிலேயே வசித்து வந்துள்ளனர். இவர்களுக்கு 6 வயது வர்ஷினி, 4 வயது ராகுல் என்று இரு குழந்தைகள். கடந்த 4 மாதங்களுக்கு முன்பு பண்ருட்டி வர்ஷா நகரில் குடியேறினர்.

கடந்த 15-ஆம் தேதி காலைப்பொழுதில் பூட்டிக்கிடந்த வீட்டுக்குள் இருந்து வீட்டு வாசற்படி வழியே ரத்தம் வழிந்து வெளியே ஓடியிருக்கிறது. அக்கம் பக்கத்தினர் போலீசுக்கு தகவல் கொடுக்கவே...

பலவீனமானவன் அதிர்ஷ்டத்திலும் பலமானவன்
காரியத்திலும் நம்பிக்கை வைக்கிறார்கள் -கதே

பண்ருட்டி டி.எஸ்.பி. நாகராஜன், இன்ஸ்பெக்டர் சண்முகம் ஆகியோர் விரைந்து வந்து பூட்டியிருந்த வீட்டை திறந்து பார்த்தபோது, குமரவேல் மனைவி ராஜேஸ்வரி தலை நசுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். அவரது கணவர், குழந்தைகள் யாரும் அங்கு இல்லை. இதையடுத்து, தலைமறைவான குமரவேலுவை போலீசார் காடாம்புலியூர் பகுதியில் தேடிப்பிடித்து கைது செய்துள்ளனர். குமரவேல் போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்தில், “என் மனைவியை காதலித்து திருமணம் செய்துகொண்டேன். எங்கள் இருவருக்கும் சமீபகாலமாக அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டது. இதனால் என்னிடம் கோபித்துக்கொண்டு தாய் வீட்டுக்குச் சென்றாள். அங்கிருந்து எனக்கு விவாகரத்து கேட்டு நோட்டீஸ் அனுப்பினார். அதன் பிறகு இருதரப்பும் சமாதானமாக, ராஜேஸ்வரியின் விருப்பப்படி பண்ருட்டி வர்ஷா நகரில் குடியேறினோம். இங்கு வந்த பிறகும் என் மனைவி திருந்தவில்லை. என் மனைவி செல்போனில் டிக்டாக் மூலம் பாடல் பாடியும், நடித்தும் மிமிக்கிரி செய்து வெளியிட்டு அதன்மூலம் பல ஆண் நண்பர்களுடன் தொடர்பில் இருந்தார். அதை நான் பலமுறை கண்டித்தேன், அவள் கேட்கவில்லை. காதலர் தினத்தன்று நான் கார் சவாரிக்கு சென்றுவிட்டேன். அதை சாதகமாக்கிக்கொண்டு ஆண் நண்பர்களுடன் வெளியூர் சென்றுவிட்டு இரவு வீடு திரும்பினார். இது பற்றி அவரிடம் எச்சரித்தேன். 'நம் குழந்தைகள் எதிர்காலம் நன்றாக இருக்கவேண்டும்; இந்த தவறான பழக்கத்தை நிறுத்து' என்று கூறினேன். இதனால் இருவருக்கும் வாய்த் தகராறு ஏற்பட்டது. அதன்பின் ராஜேஸ்வரி தூங்கிவிட்டார்.

நான் கோபம் தணியாமல் இருந்தேன். இரவு பதினொரு மணிக்கு மேல் பக்கத்தில் இருந்த குழவிக் கல்லை எடுத்து ராஜேஸ்வரி தலையில் போட்டேன். அங்கிருந்த இரும்பு ராடையும் எடுத்து தலையில் தாக்கினேன். இதில், ராஜேஸ்வரி அதே இடத்தில் ரத்தவெள்ளத்தில் இறந்துவிட்டார். அதன்பிறகு என் குழந்தைகளை அழைத்துக்கொண்டு காடாம்புலியூர் சென்றுவிட்டேன்” என்று தெரிவித்துள்ளார்.

ராஜேஸ்வரிக்கு டிக்டாக் பழக்கம் இருந்தது போலவே, குமரவேலுவுக்கு திருநங்கைகள் பழக்கம் இருந்துள்ளது. ஆண் நண்பர்களுடன் டிக்டாக்கில் அடிக்கடி அரட்டை அடிப்பதைத் தெரிந்துகொண்டு, அதை சுட்டிக்காட்டி குமரவேல் சண்டை போட்டிருக்கிறார். அதே போலவே, திருநங்கைகளுடன் இருக்கும் தொடர்பை சுட்டிக்காட்டி ராஜேஸ்வரி அடிக்கடி சண்டை போட்டிருக்கிறார் .இதனால் தான் இருவரும் பிரிந்து விவாகரத்து வரை சென்றிருக்கிறார்கள் என்ற விவரம் போலீசார் விசாரணையில் தெரிய வந்துள்ளது. குமரவேல் தற்போது சிறையில் உள்ளார்.

பெற்றோர்கள் எடுத்த தவறான முடிவுகளால் இரு குழந்தைகளும் செய்வதறியாது தவித்துக்கொண்டிருக்

Feb 26-2020 RIL

Vol.32
Issue No: 90
நக்கீரன்
NAKKHEERAN

நக்கீரன் பப்ளிகேஷன்ஸுக்காக, நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ், 105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14ல் அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்:
நக்கீரன் கோபால்
தொலைபேசி: 044-43993000 தொலைநகல்: 28485454
மின்அஞ்சல் : nakkheeran2003@yahoo.com
nakkheeran2003@gmail.com
இணையம்: www.nakkheeran.in

பொறுப்பாசிரியர்: கோவி.லெனின்
முதன்மை துணை ஆசிரியர்கள்:
ஆரூர் தமிழ்நாடன், இரா.த.சக்திவேல்
முதன்மை சிறப்பு நிருபர்கள்:
இரா.இளையசெல்வன், தாமோதரன் பிரகாஷ்
துணை ஆசிரியர்கள்:
ராம்கி, ஈ.பா.பரமேஷ்வரன்
உதவி ஆசிரியர்கள்: எம்.செந்தில்குமார்,
க.சுப்ரமணியன், ச.ப.மதிவாணன்
முதன்மை நிருபர்கள்:
ஜீவாதங்கவேல், பரமசிவன்
தலைமை நிருபர்கள்: சக்திவேல், எஸ்பிசேகர், ஜெடிஆர்.,
மனோசௌந்தர்
நிருபர்கள்: ராஜா, பகத்சிங், அருள்குமார், அண்ணல்
மணிகண்டன், செல்வகுமார், அரவிந்த்,
அருண்பாண்டியன், இளையராஜா
ஒருங்கிணைப்பு : அ.பொன்னுச்சாமி
பிழை திருத்துநர் : சி.சந்திரபாபு

முதன்மை வடிவமைப்பு : குரு
தலைமை வடிவமைப்பாளர்கள்:
துரை.கணேசன், ஆர்.சி.மதிராஜ், த.சரவணப்பெருமாள்
துணை வடிவமைப்பாளர்கள்:
எம்.தாணு, ச.ராஜேந்திரன்
தலைமை புகைப்படக் கலைஞர்கள்:
ஸ்டாலின், பி.அசோக்குமார்
புகைப்படக் கலைஞர்கள்: ப.ராம்குமார், ம.குமரேஷ்

மேலாண்மை நிர்வாகி : ஆர்.குருசாமி
தலைமை தயாரிப்பு மேலாளர் : ஆர்.சுந்தர்
பொது மேலாளர் : எஸ்.சுரேஷ்குமார்
நிர்வாக மேலாளர் : சி.பிரான்சிஸ்
கணக்கு & சந்தா மேலாளர் : எம்.சந்திரமோகன்
சந்தா பிரிவு உதவியாளர்கள்: பார்த்திபன், முகமதுஇக்வான்
முதன்மை காசாளர் : பி.என்.ஆனந்த்
தயாரிப்பு மேலாளர்கள் : ஆர்.கௌரிநாதன்,
பி.மோகன், குணசேகர்
விநியோக மேலாளர் : கே.மலைக்கண்ணன்
விநியோக உதவி மேலாளர் : சத்தியசீலன்
விநியோகம் : கே.பாலசுப்ரமணியன், லாரன்ஸ், அரவிந்த்
தயாரிப்பு ஒருங்கிணைப்பாளர்கள் :
து.கண்ணன், வெங்கடேஷ்
தயாரிப்பு உதவி : எச்.கண்ணன், பி.கணேசன்,
வ.மணவாளன், சந்திரோதயம்
விளம்பர மேலாளர்கள் :
பி.என்.மூர்த்தி, சி.சுரேஷ்குமார்
பிரதிநிதிகள்: சுப்பு, கே.சிவகுமார்
கணக்கு ஒருங்கிணைப்பு : தீனதயாளன், ஷபீர் அகமது
தலைமை கள மேலாளர் : க.பாண்டியராஜன்
துணைத் தலைமை கள மேலாளர் : ஆர்.சீனிவாசன்
கள மேலாளர்கள் : கந்தசாமி, பரமசிவன்
பதிப்பக மேலாளர் : தனுஷ்
பதிப்பக உதவி : கிறிஸ்டோபர், ராமலிங்கம்,
சந்துரு, யூனூஸ், பாண்டியன்
தனி சட்ட ஆலோசகர் : எல்.சிவகுமார், B.Com., L.L.B.,


Our Bankers : M/s. INDIAN BANK, Sterling Road Branch

சிறப்புக்கட்டுரைகள் மற்றும் பேட்டிகளின் கருத்துக்கள் அதைத் தெரிவித்தவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத் தன்மைக்கு நக்கீரன் நிர்வாகம் பொறுப்பல்ல.

கிறார்கள். டிக்டாக் போதையினால் இப்படி ஒரு பக்கம் சமூகம் சீரழிந்துவரும் நிலையில், மது போதையினால் தகாத உறவுகள் உண்டாகி தினம் தினம் படுகொலைச் சம்பவங்கள் நடந்து அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன.

தூத்துக்குடி மாவட்டம் புங்குவார் நத்தம் கிராமத்தைச் சேர்ந்த மேள இசைக்கலைஞர் சண்முகம். இவருக்கு மாரியம்மாள் (வயது45) என்ற மனைவியும், 5 பிள்ளைகளும் இருந்தனர். நான்கு பிள்ளைகளுக்கு திருமணம் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. மாரியம்மாளுக்கும் எதிர்வீட்டு இளைஞர் ராமமூர்த்தி (28 வயது )க்கும் தகாத உறவு ஏற்பட்டது. சண்முகம் தொழில் காரணமாக அடிக்கடி வெளியூர் செல்லும்போது மாரியம்மாளும் ராமமூர்த்தியும் உல்லாசமாக இருந்துள்ளனர். இந்த விஷயம் சண்முகத்துக்கு தெரியவந்ததும், அவர் பலமுறை மனைவி மாரியம்மாளை எச்சரித்துள்ளார். மாரியம்மாள் அதை பொருட்படுத்தவில்லை. கடந்த 15-ஆம் தேதி வழக்கம்போலவே மாரியம்மாளும், ராமமூர்த்தியும் உல்லாசமாக இருந்தபோது, இருவரையும் வீச்சரிவாளால் வெட்டிச் சாய்த்தார் சண்முகம். அவரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.


ஜெயசீலன்




கடலூர் மாவட்டம் கிருஷ்ணன்பாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர் சிவகாமசுந்தரி (வயது 45) இவருக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். இவர்கள் தனியார் கம்பெனியில் வெளியூர்களில் வேலை பார்க்கிறார்கள். இவரது கணவர் பாலசுப்பிரமணியம் சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். சிவகாமசுந்தரி தனியாக வசித்து வந்துள்ளார். கடந்த 14-ஆம் தேதி வீட்டுக்கு அருகில் உள்ள கரும்பு தோட்டத்தில் பலா மரத்தின் அடியில் கொலை செய்யப்பட்டு கிடந்தார். இந்த கொலை வழக்கில் கைதான 26 வயது இளைஞர் ஜெயசீலன் அளித்த வாக்குமூலத்தில், ‘சிவகாமசுந்தரிக்கும் எனக்கும் தொடர்பு இருந்தது. வீட்டுக்கு அருகில் உள்ள கரும்பு தோட்டத்தில் பலா மரத்தின் கீழே இருவரும் அடிக்கடி மது குடித்துவிட்டு உல்லாசமாக இருப்போம். அன்றைக்கும் அப்படி இருந்தபோது, எனது திருமணம் பற்றிய விவாதத்தில் ஆத்திரத்தில் அவரை அடித்ததும் இறந்துவிட்டார்’ என்று கூறியுள்ளார்.

“இப்படிப்பட்ட சம்பவங்களால், பண்பாடு, கலாச்சாரம், அன்பு, பாசம் என உலகத்திற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த தமிழினம் இப்பொழுது அதையெல்லாம் சீரழித்துக் கொண்டிருக்கிறது” என்று வேதனையை தெரிவிக்கும் சமூக ஆர்வலரான வடலூர் கல்விராயர், “தமிழகத்தில் உள்ள அனைத்து சாராயக்கடைகளையும் மூடவேண்டும். அதேபோல் செல்போன் வாட்ஸ்ஆப், பேஸ்புக் ஆகியவற்றை பயன்படுத்துபவர்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் கொண்டுவரவேண்டும். அரசு பொதுநல அமைப்புகள் ஏற்படுத்தும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் இன்னும் அதிகரிக்கவேண்டும்” என்கிறார் அக்கறையுடன்.

-எஸ்.பி.சேகர்

Feb 26-2020RIL


அப்பல்லோவில் ஜெ!
2016 செப்.22 - 10.30 p.m.
to டிச.05 - 11.30 p.m.
நக்கீரன்




'தனியார் பொறியியல் கல்லூரிகளில் போலிச் சான்றிதழ்கள் குறித்து விசாரணை செய்யப்போகும் அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்களே போலிச் சான்றிதழ்கள் கொடுத்து பணிஉயர்வு பெற்றவர்கள்தான். இவர்கள், எப்படி நியாயமாக விசாரிப்பார்கள்?' என்ற திடுக்கிடும் தகவல் கிடைக்க, மேலும் விசாரிக்க ஆரம்பித்தோம்.

சி.ஏ.எஸ். (Career Advancement Scheme) திட்டத்தின்மூலம் அண்ணா பல்கலைக்கழகத்தின் நான்கு மையங்கள் மற்றும் 16 உறுப்புக்கல்லூரிகளில் துறைரீதியான பணி உயர்வு 9 ஆண்டுகளுக்குப்பிறகு கடந்த 2017 ஆம் ஆண்டுதான் நடந்தது. உதவிப் பேராசிரியர்கள், சீனியர் உதவிப் பேராசிரியர்கள், செலக்‌ஷன் கிரேடு 1 உதவிப்பேராசிரியர்கள், இணை பேராசிரியர்கள், பேராசிரியர்கள், மூத்த பேராசிரியர்கள் என ஆறு விதமானவர்கள் விண்ணப்பிப்பார்கள். ஏ.ஐ.சி.டி.இ. எனப்படும் அகில இந்திய தொழில்நுட்பக் கவுன்சில் விதிமுறைப்படிதான் பணி உயர்வு வழங்கப்படும். இதில்தான் முறைகேடுகள் நடந்துள்ளன. 'இதற்கு முக்கியக்காரணமே அப்போதைய ரெக்ரூட்மெண்ட் (Recruitment Director) இயக்குனரும் தற்போதைய அண்ணா பல்கலைக்கழக தேர்வுக்கட்டுப்பாட்டு இயக்குனருமான பேராசிரியர் வெங்கடேசன்தான்' என்று குற்றஞ்சாட்டுகிறார்கள்.

இதுகுறித்து நம்மிடம் பேசும் அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்களோ, ''கவிதா என்பவர் சி.இ.ஜி. வளாகத்தில் இ.இ.இ. துறையில் உதவிப் பேராசிரியராக 2003-ஆம் ஆண்டு சேர்கிறார். இதற்குமுன் எங்கேயுமே வேலை செய்ததாக விண்ணப்பத்தில் குறிப்பிடவில்லை. ஐந்து வருடங்கள் ஆகிவிட்டதால் 2008-ஆம் ஆண்டு சீனியர் உதவிப் பேராசிரியராக பணி உயர்வு பெறுகிறார். ஆனால், 2017-ஆம் ஆண்டு கேரியர் அட்வான்ஸ்மெண்ட் ஸ்கீமில் நேரடியாக பேராசிரியர் பணி உயர்வுக்காக விண்ணப்பித்து அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்களையே அதிர்ச்சியடைய வைத்திருக்கிறார்.

Feb 26 2020-RR

அண்ணா பல்கலைக்கழகத்தில் சேரும்போதும், 2017-ஆம் ஆண்டு பணி உயர்வுக்கு விண்ணப்பிக்கும் கடைசி தேதியான 2017 ஜூலை 27 மாலை 5 மணிவரை கூட எந்த முன் அனுபவத்தையும் குறிப்பிடவில்லை சீனியர் உதவிப்பேராசி
போர்ட்டலை குளோஸ் பண்ண
வெங்கடேசன். ஆனால், 2003 ஆ
கல்லூரியில் வேலை செய்ததாக
கவிதாவுக்காக, 2018 செப்டம்பர் 7-
வாரங்களுக்கு முன்பு ஆன்லைன் அ
மட்டுமே கொடுக்கப்பட்டிருந்த பா
ஓப்பன் செய்திருக்கிறார் ரெக்ரூட்
துக்குப் புறம்பாக, தாமதமாக இ
சான்றிதழை பிரிண்ட் அவுட் எடுத்
ரெக்ரூட்மெண்ட் சேர்மன் உமா
கவிதாவை பேராசிரியர் ஆக்கி
அடிஷனல் போஸ்டிங்குகளையும்

இது, சர்ச்சையானதால் மு
ஒருநபர் கமிட்டி விசாரணை நட
செய்ததை அவர் 7 பக்கத்துக்கு ரி
மட்டும் திரும்பப்பெற்றார்களே



அண்ணா பல்கலைக் கழகம்

அறிவால் உழைப்பவர் ஆளுகின்றனர், உடலால் உழைப்பவர் ஆளப்படுகின்றனர் -டெய்லர்



# சான்றிதழுக்கு ...ரியர் போஸ்ட்!

## ...ல்கலைக்கழக சர்ச்சை!

... கவிதா. விண்ணப்பித்த ஆன்லைன் ...ட்டார் ரெக்ரூட்மெண்ட் இயக்குனர் ...ண்டுக்கு முன்பு தனியார் பொறியியல் ...ாலி சர்டிஃபிகேட்டை வாங்கி வந்த ...தி நேர்முகத் தேர்வு நடப்பதற்கு மூன்று ...கேஷன் வெப்-போர்ட்டலை தன்னிடம் ...வர்டை வைத்து சட்டத்துக்குப்புறம்பாக ...ன்ட் இயக்குனர் வெங்கடேசன். சட்டத் ...னக்கப்பட்ட அந்த போலி அனுபவச் ...ிண்ணப்பங்களோடு இணைத்துவிட்டார் ...வரி. இதன்மூலம் அனுபவம் இல்லாத ...டார்கள். இதைப் பயன்படுத்தி அவர் ...கிவிட்டார்.

...ன் பதிவாளர் ஜெயராமனை வைத்து ...பட்டது. இதன்மூலம் கவிதா மோசடி ...ர்ட்டாக கொடுத்ததால் பணி உயர்வை ... போலிச்சான்றிதழ் கொடுத்ததற்காக துறைரீதியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உடந்தையாக இருந்த வர்கள் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதேபோல், அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியான அரியலூர் அண்ணா பொறியியல் கல்லூரியில் கோகுல் என்பவர் போலிச் சான்றிதழ் கொடுத்து பணிஉயர்வு பெற்றதை கண்டுபிடித்து புகார் கொடுத்தோம். அவர், மோசடியாக பெற்ற பணி உயர்வைத் திரும்பப் பெற்றார்களே தவிர துறை ரீதியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பண்ருட்டியிலுள்ள அரசு அண்ணா பொறியியல் கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் சீனிவாசன், சுகன்யா ஆகியோரின் மோசடியைக் கண்டுபிடித்து புகார் கொடுத்தோம். மோசடி பணி உயர்வைக்கூட திரும்பப்பெறாமல் அவர்களை ரிசைன் பண்ணச் சொல்லி அனுப்பிட்டாங்க. ஆனா, அவங்க ரெண்டு பேரும் ரிசைன் பண்ணிட்டு அந்த மோசடி பணி உயர்வை பயன்படுத்தி என்.ஐ.டி.யில் இதைவிட அதிக சம்பளத்துக்கு பெரிய வேலையில் சேர்ந்துவிட்டார்கள். இன்னும் 15 பேர் பட்டியலை வெளியிட்டோம். அவர்கள் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால், உண்மையான பேராசிரியர்களுக்கான பணி உயர்வும் சம்பளமும் பாதிக்கப்படுகிறது'' என்றனர்.

இதுகுறித்து, குற்றஞ்சாட்டப்பட்ட அண்ணா பல்கலைக்கழகத் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் வெங்கடேசனிடம் நாம் கேட்டபோது, ''எனக்கும் இச்சம்பவத்துக்கும் எந்த தொடர்பும் கிடையாது. வெப்போர்ட்டலை நான் ஓப்பன் செய்யவில்லை. கடைசிநேரத்தில் கவிதா தனது எக்ஸ்பீரியன்ஸ் சர்டிஃபிகேட்டை யார் மூலமாக கொடுக்கவேண்டுமோ அவர் மூலம் ரெக்ரூட்மெண்ட் சேர்மன் உமாமகேஸ்வரியிடம் கொடுத்திருக்கிறார்" என்றார்.

நாம், சேர்மன் உமா மகேஸ்வரியிடம் கேட்டபோது, ''அப்போதைய பதிவாளர் மூலம் கவிதா எக்ஸ்பீரியன்ஸ் சர்டிஃபிகேட்டை கொண்டு வந்து கொடுத்ததால் பேராசிரியர் ஆக்கினோம்'' என்றார்.

அப்போதைய பதிவாளர் குமாரை தொடர்புகொண்டு கேட்டபோது, ''ஒரு கடிதம் வருகிறது என்றால் அதை ஃபார்வேர்டு செய்வதுதான் பதிவாளரின் வேலை. அந்தக் கடிதத்தை பரிசீலிப்பதா? வேண்டாமா? என்பதை ரெக்ரூட்மெண்ட் இயக்குனர் வெங்கடேசனும் கமிட்டி சேர்மன் உமா மகேஸ்வரியும்தான் முடிவு செய்திருக்கவேண்டும்'' என்றார்.



வெங்கடேசன்



உமா மகேஸ்வரி



கவிதா

குற்றஞ்சாட்டப்பட்ட உதவிப் பேராசிரியர் கவிதாவை தொடர்புகொண்ட போது, ''மீண்டும் லைனில் வருகிறேன்'' என்றவர் லைனில் வரவில்லை.

இப்படிப்பட்ட பேராசிரியர்கள்தான் முறைகேடான மாணவர்கள் உருவாகவும் காரணமாக இருக்கிறார்கள்.

-மனோசௌந்தர்

Feb 26 2020 RIL



# சில்மிஷ டார்ச்சரில் சிறைத்துறை பெண்கள்!

**தமிழகச் சிறைகளின் அவலநிலை குறித்து அத்துறையினர், தங்களது ஆதங்கத்தை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றனர்.**

தமிழகச் சிறைகள் ஒவ்வொன்றிலும், பரமசிவன் கழுத்துப் பாம்பாக உயரதிகாரியை வளைத்துப்போட்டு, சிறை அலுவலர்களையும், பணியாளர்களையும் சீண்டியபடியே இருப்பவர்களைக் காணமுடியும்.

அந்த ..லூர் மாவட்டங்கள் இரண்டிலும் அழிச்சாட்டியம் செய்யக்கூடிய பேர்வழியாக இருக்கிறார், தன் பெயரில் ராம நாமத்தைக் கொண்டிருப்பவர். பெயருக்குத்தான் ஸ்டோர் வேலை. பார்ப்பதெல்லாம், வசூல் பணத்தை உயரதிகாரிகளிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதுதான். 'இந்த சூப்பிரண்டுகிட்ட வாங்கி அந்த டி.ஐ.ஜி.க்கு மாமூல் பணத்தைக் கொடுப்பது நானாக்கும்.. என்னை யாரும் எதுவும் பண்ண முடியாது' என்று சக சிறைத்துறையினரிடம் தம்பட்டம் அடிப்பது இவரது வழக்கம். இவரைப் போன்றவர்களுக்கு, மற்றவர்களைப் போல் யூனிபார்ம் அணிந்து பார்க்கின்ற பாரா டூட்டியோ, பாதுகாப்பு டூட்டியோ, இரவுப் பணியோ மேலதிகாரி தர மாட்டார். இவர்கள், வெள்ளைச் சட்டை, காக்கி பேன்ட் என ஹாஃப் சிவிலில் சிறைக்கு வந்து கெத்து காட்டுவார்கள்.

'ஏனுங்க.. இல்லீங்க... அம்மணி' என வார்த்தைக்கு வார்த்தை மரியாதையை வெளிப்படுத்தும் ஊரிலுள்ள அந்த மத்திய சிறையில், மனோகரமானவர் கண்காணிப்பாளரின் தனி உதவியாளராக இருக்கிறார். இவர், 'சிறைக் கண்காணிப்பாளருக்கு ஒரு வேலையும் தெரியாது. இங்க நான்தான் எல்லாம். அவர் என்னோட பாக்கெட்ல' என்று உதார் விட்டு பெண் களப்பணியாளர்களிடம் அத்துமீறி நடக்கிறார்.

'பெண்களாகிய எங்களை தனித்தனியே விசாரணை செய்து இந்த காமக் கொடூரன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என முதலமைச்சரின் தனிப் பிரிவுக்கும், சிறைத்துறை தலைவருக்கும், சம்பந்தப்பட்ட தனி உதவியாளரை ஒருமையில் திட்டி கண்ணீர் மல்க புகார் அனுப்பியிருக்கிறார்கள், பெண் பணியாளர்களின் நலன் விரும்பிகள். அந்த மத்திய சிறையில், பெண் களப்பணியாளர்கள் அனுபவித்து வரும் கொடுமைகளை, அவர்களின் வாய்ஸிலேயே கேட்போம்!

"நாங்கள்லாம் இந்த மத்திய சிறையின் ஒரு பிரிவான பெண்கள் தனிச்சிறையில் வேலை பார்க்கிறோம். இந்தச் சிறையில் 20 பெண் களப்பணியாளர்களும், மத்திய சிறையில் 10 பெண் அமைச்சு பணியாளர்களும் இருக்கிறோம். இங்கே சூப்பிரண்டுக்கு பி.ஏ.வா இருக்காரு, அந்தப் பொம்பள பொறுக்கி. வேலை விஷயமா கையெழுத்து வாங்கப் போகும்போதெல்லாம், ஆபாசமா பேசுவாரு; கையப் பிடிச்சு இழுப்பாரு. பெண் காவலர்கள் யூனிபார்ம்ல போனாலும், அமைச்சுப் பணியாளர்கள் சேலை கட்டிட்டுப் போனாலும், 'புதுசா' என்று கேட்டு, விகாரமா பார்ப்பாரு. ரெட்ட அர்த்தத்துல


Feb 26-2020 RIL

'நான் ரசனைக்காரன்'னு சொல்லுவாரு. அங்கங்கே தொடவும் செய்வாரு. அவரோட ஈனச்செயலை பொறுக்கமுடியாம, சூப்பிரண்டுகிட்ட சொன்னோம். அவரு என்னன்னா... 'வேலை பார்க்கிற இடத்துல இதெல்லாம் சகஜம்'னு அவருக்கு சப்போர்ட் பண்ணுறாரு.

சிறைத்துறை டி.ஐ.ஜி.கிட்ட போனோம். நாங்க சொன்னதை பொறுமையா கேட்ட அவர், இதற்காகவே பெண் வன்கொடுமை என்றொரு பிரிவை ஆரம்பிச்சு, அதுல புகார் கடிதம் கொடுங்கன்னு உத்தரவு போட்டார். இது அந்த பி.ஏ. பொறுக்கிக்கு தெரிஞ்சுபோச்சு. 'உங்கள நான் பார்த்துக்கிறேன். ஏதாச்சும் ஒரு ஃபைலை கிழிச்சுப் போட்டு ஃபைல் மிஸ்ஸிங்னு ரிப்போர்ட் பண்ணி, இந்த சூப்பிரண்ட வச்சி உங்க எல்லாரையும் சஸ்பெண்ட் பண்ணாம விடமாட்டேன்'னு நேரடியாவே மிரட்டுறாரு.

இதுல கொடுமை என்னன்னா... எங்ககூட இதே சிறையில் வேலை பார்க்கிற தமிழானவங்க ஒரு பெண்ணா இருந்தும், 'பி.ஏ. நினைச்சாருன்னா உங்க வேலை போயிரும். இவரு ஒருத்தர்கிட்ட மட்டும் அட்ஜஸ்ட்பண்ணி நடந்துக்கிட்டா என்ன தப்பு'ன்னு, அந்தாளுக்கு மாமா வேலை பார்க்கிறாங்க. ஏன்னா... பி.ஏ.வுக்கு இவங்க நெருக்கம். நாங்க அனுப்பிய புகாரை முதலமைச்சர் பார்த்தாரா இல்லியான்னு தெரியல. சிறைத்துறை தலைவரும் நடவடிக்கை எடுக்கல. அதான்... 'நக்கீரன்' கவனத்துக்கு கொண்டு வர்றோம்'' என அபயக்குரல் எழுப்பினர்.

சிறையில் கேன்டீன் நடத்தும் ஒரு பி.சி.பி. (Prisoners' Canteen Bazar) காவலரை சாதாரணமாக எடை போட்டுவிடக் கூடாது. அவர், இரண்டு மாதங்களில் ரூ.6 லட்சம் வரை சம்பாதித்துவிடக் கூடிய வல்லமை பெற்றவர். சூப்பிரண்டுக்கு விசுவாசமான காவலர்களுக்கு மட்டுமே பி.சி.பி. நடத்தும் வாய்ப்பு கிடைக்கும். டீ யிலிருந்து பீடி வரை, விற்பனையில் ரெகார்டாக ஒரு கணக்கு, அன்ரெகார்டாக ஒரு கணக்கு என்று பி.சி.பி. காட்டில் ஒவ்வொரு நாளும் பணமழை கொட்டும். மனு பார்க்கவரும் உறவினர்களிடம் நேரடியாகப் பெறும் பணத்திலிருந்துதான், கைதிகளுக்கு அன்ரெகார்டான கவனிப்புகள் நடக்கும். திருட்டு வழக்கில் புழல் சிறையில் அடைபட்ட ரமேஷ், சக கைதிகள் எந்நேரமும் கஞ்சா புகைப்பதைக் கண்டு எரிச்சலாகி, சிறை அதிகாரிகளுக்குத் தகவல் அளித்தது தெரிந்து, 6 கைதிகள் ரமேஷை கடுமையாகத் தாக்கிய சம்பவம், இந்த மாதத்தின் தொடக்கத்தில் நடந்தது.


அனுப்புனர்:- பெண்கள் பணியாளர் நலன் விரும்பிகள், மத்தியசிறை, கோவை-18

பெறுநர்:- முதலமைச்சர் தனிப்பிரிவு,தலைமைச் செயலகம், சென்னை -600009.

ஐயா,

[illegible]

இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள
"பெண் பணியாளர்கள் நலன் விரும்பிகள்"

[illegible] காவல்துறை தலைவர் (ம)சிறைத்துறை தலைவர், சென்னை -08

அந்த புகார் மனு

Feb26-2020-RL

தென்மாவட்ட மத்திய சிறையில் சோதனை நடந்தபோது, கைதி ஒருவனிடமிருந்து ஒன்றரை கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. அவனை அடி பின்னியெடுத்ததும், 'முதல்நிலைக் காவலர் கிங் கொண்டுவந்து கொடுத்ததுதான்' என்று உண்மையை உளறிவிட்டான். அதற்காக, அந்தக் காவலர் மீது எந்த நடவடிக்கையும் பாயவில்லை.

ஸ்பெஷலான சில கைதிகளின் கைக்கு அதிகாரிகளிடமிருந்தே செல்போன் கிடைக்கும். சிறைக்குள் செல்லும் அரிசி, பருப்பு, காய்கறி மூடைகளில் செல்போன்களும் சேர்ந்து பயணிக்கும். அதிகாரிகளின் ஒத்துழைப்பு இருப்பதால், எந்த ஸ்கேனரும் இதைக் கண்டுபிடிக்காது.

''சிறைத்துறை முறைகேடுகளைத் தடுக்க என்னதான் வழி?'' அவர்களிடமே கேட்டோம்.

''மிகவும் கறாரான, நேர்மையான ஒரு ஏ.டி.ஜி.பி. இத்துறையில் பொறுப்பேற்க வேண்டும். முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இத்துறை யைக் கொண்டுவரவேண்டும்'' என்றனர் வேதனையோடு.

-ராம்கி

வெற்றி பெறுவதற்கு அதிர்ஷ்டம் அவசியம் என்று சோம்பேறிகள்தான் கருதுவார்கள் -லிவ்வி



# சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை

## சிறந்த கட்டுரைகளுக்கு விருது!

நாளிதழ்கள், பருவ இதழ்கள், இணைய தளங்களில் ஜனவரி 2019 முதல் டிசம்பர் 2019 வரை வெளியான கட்டுரைகளில், அரசியல், சமூகம்- பண்பாடு, பொருளாதாரம் ஆகிய 3 பிரிவுகளில், தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கட்டுரைகளுக்கு, சின்னகுத்தூசி நினைவு விருதும், தலா ரூ.10,000/-மும் அளிக்கப்படும்.

**அனுப்ப வேண்டிய முகவரி**

**சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை**
**கட்டுரைப் போட்டி**
**105, ஜானிஜான்கான் சாலை,**
**இராயப்பேட்டை, சென்னை-600 014.**

**email:**
**chinnakuthoositrust@gmail.com**

கட்டுரைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி **30-04-2020**

அறக்கட்டளை தீர்ப்பே இறுதியானது.

தொடர்புக்கு... 96770 91385

Advt




## வீரப்பன் மரணம் யாரால்? எப்படி?

# வீரப்பன் கொல்லப்பட்டதில் உள்ள மர்ம முடிச்சு!

தமிழகம்-கர்நாடக அரசுகளுக்கு சிம்ம சொப்பனமாக, பல ஆண்டுகள் காட்டில் மறைந்து வாழ்ந்து, அதிகாரிகள் கொலை, முக்கிய பிரமுகர்கள் கடத்தல் உள்ளிட்ட பல கொடூரச் செயல்களைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட சந்தனக் கடத்தல் வீரப்பனும் அவனது கூட்டாளிகளும் 2004-ம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வு, 16 ஆண்டுகளுக்குப் பின்னரும் மக்கள் மனதில் இன்னும் நிழலாடிக் கொண்டு இருப்பதைச் சுட்டிக் காட்டும் வகையில் இந்த நூல் அமைந்து இருக்கிறது. வீரப்பனால் கடத்தப்பட்ட நடிகர் ராஜ்குமார் உள்பட பலரை வெற்றிகரமாக மீட்டு வந்ததோடு, வீரப்பனுடன் பலமுறை பேச்சுவார்த்தை நடத்திய இந்த நூலின் ஆசிரியர், காட்டுக்குள் துணிந்து சென்று வீரப்பன் தொடர்பாகத் திரட்டிய அதிர்ச்சிகரமான உண்மைகளை 2-ம் பாகமான இந்த நூலில் விளக்கமாகத் தந்து இருக்கிறார். காட்டில் மறைந்து வாழ்ந்த வீரப்பன் எவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டான் என்பதை அரசுத் தரப்பு ஒரு விதமாகச் சொல்லி இருந்தாலும், அவற்றை மறுத்து இருக்கும் ஆசிரியர், வீரப்பன் கொல்லப்பட்டதில் உள்ள மர்ம முடிச்சுகள் என்று சிலவற்றைத் தெரிவித்து இருப்பது வியப்பான தகவல்களாக உள்ளன. இது தவிர வீரப்பன் குடும்பம் பற்றிய தகவல், அதிகாரிகளை வீரப்பன் கொன்றதன் பின்னணி சம்பவங்கள், வீரப்பனுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை, சரண் அடைய விரும்பிய வீரப்பன் பிறகு அதில் இருந்து பின் வாங்கியது ஏன் என்பதற்கான விளக்கம் போன்ற வியப்பான வரலாறும், இதுவரை அதிகம் பகிரப்படாத வீரப்பன் தொடர்பான ஆச்சரியமான படங்களும் இந்த நூலை ஆர்வத்துடன் படிக்கத் தூண்டுகோலாக இருக்கின்றன.

(ஆசிரியர்: நக்கீரன்கோபால், வெளியீடு: நக்கீரன் பப்ளிகேஷன்ஸ், 105, ஜானி ஜான்கான் சாலை, ராயப்பேட்டை, சென்னை-14, விலை: ரூ.300, போன்: 044-43993029)

நன்றி: தினத்தந்தி

Advt

# Beep Song

# சத்தமும் சர்ச்சையும்



Feb 26-2020-RIL

## 100% No Criticize

ஆர்.டி.எ(க்)ஸ்

# திருநங்கையின் சட்டப் போராட்டம்!

பெயர்தான் தாய்நாடு. ஆனால், சுதந்திரம் பெற்று இத்தனை ஆண்டுகளில் ராணுவத்தில் பெண்கள் உயர்பதவி அடைவதற்கான வாய்ப்பே இப்போதுதான் கிடைக்கிறது. பெண்கள் நிலையே இதுதான் என்றால், திருநங்கைகளைப் பற்றி சொல்லவா வேண்டும்? பொதுசமூகம் கண்டுகொள்ளாத இந்தப் பிரிவிலிருந்து, தனது அடையாளத்துடனே வென்று காட்டியிருக்கிறார் திருநங்கை ரக்ஷிகாராஜ்.

இந்தப்பயணம் பற்றி நம்மிடம் பேசிய ரக்ஷிகாராஜ், "காஞ்சிபுரம், வாலாஜாபாத்தான் சொந்த ஊர். பள்ளிக் காலத்தில் என்னைத் திருநங்கையாக உணர்ந்த தருணத்திலேயே ஒடுக்குதலை எதிர்கொண்டேன். இருந்தபோதும், விரும்பிய பி.எஸ்.சி. நர்சிங் படிப்பை, பத்மஸ்ரீ நர்சிங் கல்லூரி முதல்வர் டாக்டர்.மேனகா வழிகாட்டுதலுடன், ஆண் (ராஜ்குமார்) என்ற அடையாளத்துடனே தொடங்கினேன்.

தனியாக வாடகைவீடு. செலவுக்கு, தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு இயக்கத்தில் பகுதிநேர வேலை. ஒருவழியாக கெசட்டில் பெயரை ரக்ஷிகாராஜ் என்று மாற்றிக்கொண்டு, 2018-ல் படிப்பையும் முடித்தேன். தமிழ்நாடு செவிலியர் கவுன்சிலில் பதிவுசெய்யப் போனால், படிவத்தில் ஆண்/பெண் என்று மட்டுமே இருந்தது. இங்கு பதிவுசெய்தால் மட்டுமே நர்சிங் வேலைசெய்ய லைசன்ஸ் கிடைக்கும். மூன்றாம் பாலினம்தான் எங்கள் அடையாளம். அப்படித்தானே பதிவுசெய்ய முடியும் என்று முறையிட்டால், வேறு வழியில்லை என்றார்கள். நான் விடவில்லை.

சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கரில் தொடங்கி பலரிடமும் புகாரளித்தேன். பலனில்லை. நீதிமன்றத்தை நாடினேன். விண்ணப்பத்தில் தற்காலிகமாக மூன்றாம் பாலினத்தவர் என்ற பிரிவை உருவாக்கி, பதிவுசெய்துகொள்ள நீதி இடம் தந்தது. இன்று இந்தியாவிலேயே மூன்றாம் பாலினத்தவராக பதிவுசெய்த முதல் திருநங்கை நான்" என்று பெருமிதம் கொள்கிறார்.

ரக்ஷிகாவின் இந்த சட்டப்போராட்ட வெற்றி, அவரைப் போன்ற திருநங்கைகளுக்கு சுயமரியாதையையும், வாய்ப்பையும் ஏற்படுத்தித் தந்திருக்கிறது.

-அரவிந்த்



ரக்ஷிகாராஜ்

Feb262020-RIL

# சி.ஏ.ஏ. ஸ்டார்ட்! சிறையில் நால்வர்!

அண்டைநாடான வங்கதேசத்தில் இருந்து ஏராளமானோர் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பிழைப்புத்தேடி பிற மாநிலங்களுக்கும் செல்கின்றனர். நல்லகூலி கிடைப்பதால், தமிழகத்திலும் தங்கி பலர் வேலை செய்து வருகின்றனர்.

குறிப்பாக கோவை, திருப்பூர், பெருந்துறை போன்ற தொழில் நகரங்களில் இதுபோல வந்தவர்கள் குடும்பம் குடும்பமாக தங்கியுள்ளனர். இவர்களிடம் பாஸ்போர்ட், விசா போன்ற எந்த அடையாளங்களும் இருப்பதில்லை. இப்படி இந்தியக் குடியுரிமை இல்லாதவர்களை தீவிரமாகக் கண்காணிக்குமாறு, தமிழக உளவுத்துறை போலீசாருக்கு சமீபத்தில் ரகசிய உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்படி, ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகேயுள்ள திருவேங்கடம் பாளையம் புதூர் மாகாளியம்மன் கோவில் அருகில், வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தார் ஆய்வாளர் செந்தில்குமார். அப்போது, அந்தவழியே நடந்துசென்ற நான்குபேரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்துள்ளார்.

www.nakkheeran.in

# நாளை இதுதான் கதி! நூதனப் போராட்டம்!

குடியுரிமை திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெறப் போவதில்லை என்று பிடிவாதம் காட்டுகிறது மத்திய அரசு. இந்தியாவின் பல பகுதிகளைப் போலவே, தமிழகமும் இதற்கு எதிராக கொந்தளிக்கிறது. வண்ணாரப் பேட்டையில் போராட்டம் நடத்தியதற்காக காவல்துறை தாக்கியதில் இருந்து, தமிழ்நாடு முழுவதும் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. கேரளாவைப் போல தமிழ்நாட்டிலும் சி.ஏ.ஏ.வுக்கு எதிராக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றச் சொல்கிறார்கள் போராட்டக்காரர்கள். ஆனால், இந்த சட்டத்தால் பாதிப்பு வராது என்று மத்திய அரசே சொல்லிவிட்டது என சட்டமன்றத்தில் பேசி, போராட்டக்காரர்களின் எதிர்பார்ப்பை பொய்யாக்கிவிட்டது தமிழக அரசு. இதனால், தமிழகத்தின் பல பகுதிகளில் டெல்லியின் ஷாகீன்பாக் போல, தொடர் காத்திருப்புப் போராட்டங்கள் நடக்கின்றன.

திருவாரூர் மாவட்டத்தில், முத்துப்பேட்டையில் நடந்துவரும் காத்திருப்புப் போராட்டத்தில் பெண்கள், குழந்தைகள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொள்கின்றனர். தினந்தோறும் போராட்டத்தை திருவிழாவைப் போல நடத்துகிறார்கள்.



முத்துப்பேட்டையில்...

இதன் நான்காவது நாள் போராட்டத்தில், சிறைபோல கூண்டுசெய்து, 'இன்று நாம் அமைதியாக இருந்தால், நாளை நமக்கும் இந்தக் கூண்டுதான்' என்ற வாசகத்துடன் இளைஞர்கள் கூண்டுக்குள் இருந்தபடி நூதனப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களின் போராட்டம் வேகமெடுப்பதைப் பார்த்த போலீசார், 'இரவு -பகலென்று 24 மணிநேரமும் போராடாதீர்கள். இரவு 10 மணிக்கெல்லாம் முடித்துக் கொள்ளுங்கள்' என்று கேட்டுக் கொண்டதால், அதற்கு மதிப்புக் கொடுத்து, காலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை மட்டுமே போராடி வருகின்றனர்.

இதுகுறித்து போராட்டத்தில் இருந்த இளைஞர்கள் பேசும்போது, "உரிமைக்காக போராடுகிறோம். இது அமைதிவழிப் போராட்டம். இஸ்லாமியர்கள் மட்டுமின்றி, அனைத்துத் தரப்பினரும் வீதிக்கு வந்து போராடுகிறார்கள். அரசு கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கும் வரை ஓயமாட்டோம்" என்றனர் உறுதியுடன்.

-இரா.பகத்சிங்

---

இதில், நால்வரும் வங்கதேசத்தைச் சேர்ந்த பரூக் ஹாஜி, ஹிமுல் இஸ்லாம், சிராஜ் ஹாஜி, ரொபியுல் இஸ்லாம் என்பதும், இந்தியக் குடியுரிமைக்கான எந்த ஆதாரங்களும் இல்லாமல் திருவேங்கிடம்பாளையம் புதூரில் தங்கி, பெருந்துறை சிப்காட் தொழிற்பேட்டையில் செயல்படுகிற தனியார் நிறுவனங்களில் வேலைசெய்வதும் தெரியவந்துள்ளது. இதனை சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் உறுதிசெய்தன. இதையடுத்து, சட்டவிரோதமாக குடியேறியதாக வழக்குப் பதிவு செய்த பெருந்துறை காவல் ஆய்வாளர் சரவணன், நான்கு பேரையும் புழல் சிறையில் அடைத்தார்.


அந்த நாலு பேர்...

சட்ட விரோதமாக குடியேறி இருந்தாலும், சம்பந்தப்பட்ட நாட்டிற்கு தகவல் தெரிவித்து, அனுப்பி வைக்க வேண்டியது அரசின் கடமை. ஆனால், சி.ஏ.ஏ.வின் முன்வடிவம் போல, அரசே அவர்களை சிறையில் அடைக்கிறது.

-ஜீவாதங்கவேல்

பார்வை

# காட்டாறு!

நடிகர்திலகத்தின் படத்தை முன்அட்டையில் தாங்கி வெளிவந்த அந்த துவக்க நாட்களிலிருந்து நக்கீரனைத் தொடர்கிறேன்.

மிகச்சிக்கலான பன்மைத்துவம் கொண்ட நமது சமூகத்தை அரசியல் தெளிவு கொண்டோராக்குவது கடும் சவால். தேசத்தை நேசிக்கும், சமத்துவத்தை போற்றும், சமூக நீதியை முன்னிறுத்தும் யாருக்குமே வெகுமக்களை, அரசியல் விழிப்புணர்வு கொண்டோராக்குவது, எவ்வளவு அவசியம் என்பது ஒரு நீண்ட பெருமூச்சோடு அணுகும் விஷயம். நான்காவது தூணின் அறமும் கொடையும் தியாகமும் தேவைப்படுவது இந்தப் புள்ளியில்தான். இந்தப் புள்ளியில் சார்புகளில்லாது செயல்படும் ஊடகங்களில் முதலிடத்தில் இருப்பது 'நக்கீரன்'.

துவக்க நாட்களில் அரசு அலுவலகங்களில் காரணமின்றி தாமதப்படும் தங்கள் பணிகளை உடனே முடித்துக் கொள்ள உச்சரித்த மந்திரம் 'நக்கீரன் நிருபர் என் நண்பர்' என்பதை பல அரசு அலுவலகச் சுவர்கள் மௌனமாய் நகைத்தபடி பார்த்துக்கொண்டிருந்தன. தொடர்களில் அதிமுக்கியமாக நான் கருதுவது 'இந்து மதம் எங்கே போகிறது' எனும் கட்டுரைத் தொடரைத்தான்.

Feb-26-2020-RH

**2020, பிப். 19-21 இதழ்:**

தமிழகம் முழுதும் நடைபெற்று வரும் குடியுரிமைச் சட்ட எதிர்ப்பு போராட்டம் குறித்த கட்டுரை அரசியல் தலைமைக்கும், அதிகாரத் தலைமைக்குமிடையே இருக்கும் பெரும் பிரச்சினையை தெளிவாகச் சொல்லியிருக்கிறது. தமிழகம் இதுபோன்ற சிக்கலில் இதுவரை இருந்ததில்லை. முதல்வருடன் ஒற்றைக்குரலில் பேசிய அதிகாரியின் குரல் இன்று நக்கீரனை வாசித்த எளிய மனிதர்களின் இதயத்தில் தொடர் சலனத்தை உண்டாக்கியிருக்கிறது.

அன்றாடம் மக்கள் பயன்படுத்தும் பாலில் துறை சார்ந்த தில்லுமுல்லு, போலி ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள், சென்னை பள்ளிகள் ஆதாரங்களுடன் வெளிவந்துள்ள கட்டுரை சிறப்பு. 'சண்டை செய்யும் தெருக்குரல்...' போராளிகளை ஈர்க்கும் அறிவுக்குரல். அருமையான பதிவு. இப்படி அரசியல், கல்வி, கலாச்சாரத் தளங்களில் 'நக்கீரன்' பாய்ச்சிய புதுவெள்ளம் கசடுகளை அடித்துச் செல்லும் காட்டாறு.



**ச.கஸ்தூரி ரெங்கன்,** தொழில்நுட்ப பிரிவு செயலாளர், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், புதுக்கோட்டை.




## வாசகர் கடிதங்கள்!

கிராமிய வீரர்கள்!

'கம்பாலா' விளையாட்டுப் போட்டியில் என்னவொரு ஆக்ரோஷ ஓட்டம். அடேங்கப்பா... இளைஞர் சீனிவாச கவுடா ஏதோ தும்பா ராக்கெட் வேகத்துல பறந்திருப்பார் போல. என்றாலும்கூட.... அவர், உசைன்போல்ட் சாதனையை மிஞ்சுவதற்கு உறுதுணையாக இருந்த எருமை மாட்டையும் ஒரு வீரனாகப் பாவித்து பாராட்டத்தான் வேண்டும்.

**-எஸ்.மணிமேகலை,**
**வாணியம்பாடி.**

தனியார்மயம்!

'அட்சய பாத்திரா' திட்டம், சத்துணவு திட்டத்தை முடக்குவதற்கான முன்னோட்டமா.. இதிலும் தனியாரின் ஆதிக்கமா? கர்நாடகாவில் சோடைபோன இத்திட்டத்தை தமிழகத்தில் புகுத்தி ஏழைப்பிள்ளைகளின் வயிற்றில் அடிக்கலாமா?

**-ஆர்.பி.இளங்கோ,**
**கள்ளக்குறிச்சி.**


திராவிட ஆட்சி 50
(1967-2017)



திருச்சியில்....

# காவி அரசியலுக்கு எதிராக கலக்கிய நீலம்! –சிறுத்தைகள் பேரணி!

**குடியுரிமை திருத்தச் சட்ட மசோதாவை திரும்பப்பெற வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் திருச்சியில் 'தேசம் காப்போம் பேரணி' கடந்த பிப்.22-ல் நடந்தது. லட்சக்கணக்கானோர் இம்மாநாட்டில் திரண்டு வந்து திருச்சியை திணற வைத்தனர். தமிழகம் முழுவதும் திருமாவளவன் நேரடியாகச் சென்று இந்தக் கூட்டத்திற்கான முக்கியத்துவத்தை எடுத்துச்சொல்லியதன் மூலமே வி.சி.க.வினர் இந்த அளவுக்கு திரண்டு வந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.**

பேரணிக்காக வி.சி.க. கேட்ட உழவர் சந்தை இடத்தை காவல்துறை மறுத்தது. கடைசி நேரத்தில் அனுமதி வழங்கப்பட்ட மாற்று இடமான ஆர்.சி. நகர் கூட்டுச் சாலையில் இருந்து மாலை 4 மணிக்கு பேரணி புறப்பட்டு ரயில்வே காலனியில் 7:30 மணிக்கு முடிந்தது. பேரணி முழுவதும் திருமாவளவன், திறந்த வேனில் நின்றபடியே குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக முழக்கங்கள் எழுப்பியபடி வந்தார்.

குடியுரிமை திருத்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டும், தமிழ்நாடு சட்டப்பேரவையில் சி.ஏ.ஏ.-விற்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும், தேசிய குடிமக்கள் பதிவேடு கணக்கெடுப்பு திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பேரணியின் முடிவில் பேசிய திருமாவளவன், "இந்த சட்டத்தை நாங்கள் ஏன் எதிர்க்கிறோம் என்றால் நாங்கள் தந்தை பெரியார், அம்பேத்கர் பிள்ளைகள்" என்றார் ஆவேசமாக.

தொடர்ந்து அவர், "இந்தச் சட்டத்தின் மூலம் முஸ்லிம்கள் மட்டுமே பாதிக்கப்படுவார்கள் என்பது அப்பட்டமான பொய். தலித்துகள், பழங்குடி மக்கள், இந்துக்களும் பாதிக்கப்படுவார்கள். தேசிய மக்கள் தொகை பதிவேடு அமலுக்கு வந்தால், தந்தையின் சொந்த ஊர், பிறந்த சான்றிதழ் போன்றவற்றை கேட்பார்கள். எனது தாய் பிறப்பு சான்றிதழை நான் எப்படி தர முடியும்? கட்டாய பிறப்பு பதிவு சட்டம் வருவதற்கு முன்பே பிறந்தவர் அவர். பலரது பெற்றோர்களும் அப்படித்தான்.



தான் செய்த பாவங்களைப் பற்றியே ஓயாமல் எண்ணிக் கொண்டிருப்பவன் மகா பாவியாகிறான் -நபிகள் நாயகம்

அவர்கள் எப்படி சான்றிதழை கொடுக்க முடியும்?" என்று கேள்வி எழுப்பினார்.

பின்னர், "கோவணம் கட்டி இருக்க வேண்டிய திருமாவளவன், மீசையை முறுக்கி நெஞ்சை உயர்த்தி மோடிக்கு எச்சரிக்கை விடுக்கிறேன். அதற்குக் காரணம் அரசியலமைப்பு சட்டம் வகுத்த அம்பேத்கர். ஆர்.எஸ்.எஸ்.க்கு உண்மையில் யார் மீது வெறுப்பு என்றால் முஸ்லிம்கள் மீது அல்ல, கிறிஸ்தவர்கள் மீதும் அல்ல, அரசியல் அமைப்பு சட்டத்தின் மீதுதான். அரசியலமைப்பு சட்டம் இல்லை என்றால் நாம் யாரும் இங்கே நடமாட முடியாது.

இரண்டாவது முறையாக ஆட்சி அமைத்த வாஜ்பாய், அரசியலமைப்பு சட்டத்தை மாற்றி எழுத, வெங்கடாசல ஐயர் என்கிற கமிஷன் ரிப்போர்ட் அனுப்பியபோது, அப்போதிருந்த குடியரசுத் தலைவர் கே. ஆர். நாராயணன் கையெழுத்துப் போட மறுத்தார். ராம்நாத் கோவிந்த் ஆர்.எஸ்.எஸ். பயிற்சி பெற்று வந்தவர். அதனால்தான் குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்து கையெழுத்து போட்டுவிட்டார்" என்று வெடித்தார்.

தொடர்ந்து... "நாங்கள் பதவி வெறி பிடித்தவர்களாக இருந்திருந்தால் மோடியின் காலடியிலும் எடப்பாடி கும்பலுக்கு எடுபிடியாகவும் இருந்திருப்போம். நாங்கள் உங்களை மாதிரி ஆண்ட பரம்பரை என்று சொல்வது கிடையாது. நாங்கள் சனாதனத்தை எதிர்த்த கவுதம புத்தரின் பிள்ளைகள். கூலிக்கு மாரடிக்கும் கும்பலாக நாங்கள் இருக்க மாட்டோம். 70 வயது வரை அரிதாரம் பூசிவிட்டு ஆட்சி அதிகாரத்திற்கு வரவேண்டும் என்பவர்கள் இருக்கிற போது 30 ஆண்டுகாலம் இந்த பொதுமக்களுக்கு தொண்டாற்றி விட்டு ஆட்சி அதிகாரத்திற்கு ஏன் வரக்கூடாது?" எனக் கேட்டார். தி.மு.க.வின் ஆர்.எஸ்.பாரதி, பட்டியல் இன மக்கள் தொடர்பாக பேசியதற்கும் தன் உரையில் பதில் கொடுத்தார் திருமா.

"மார்ச்-4 புதுடில்லியில் குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக பேரணி நடத்த அம்பேத்கர் பேரன் அழைப்பு விடுத்திருக்கிறார். விடுதலைச் சிறுத்தைகளும் சேர்ந்து அந்தப் பேரணி நடத்துகிறோம். இனிமேல் எங்கள் களம் தமிழ்நாடு அல்ல; ஒட்டுமொத்த இந்தியா தான்" என்று சீறினார்.

-ஜா.தாவீது ராஜ்

# நீட் விலக்கு போலத்தான் வேளாண் மண்டலமும்

## –பெ.மணியரசன் விளாசல்!

'**கா**விரி டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப் பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவிப்போம்' என்று பிப்ரவரி 09-ந் தேதி, சேலத்தில் நடந்த விழாவில் பேசினார் முதல்வர் எடப்பாடி பழனிசாமி. இதைகேட்ட உற்சாகத்தில், பட்டாசு வெடித்துக் கொண்டாடினார்கள் டெல்டா மக்கள். ஆனால், 20-ந் தேதி தமிழக சட்டப்பேரவையில் அரசு அறிமுகப்படுத்திய சட்ட முன்வடிவு, சேலத்தில் முதல்வர் பேசியதற்கு மாறாக இருந்தது. ஆளுநரின் ஒப்புதலைப் பெற்றிருக்கும் இந்த சட்டதால், காவிரி டெல்டாவிற்கு எந்தப் பயனும் இருக்காது என்று அதே டெல்டா விவசாயிகள் இப்போது கொந்தளிக்கிறார்கள். இதுதொடர்பாக, காவிரி உரிமை மீட்புக்குழு ஒருங்கிணைப்பாளர் பெ.மணியரசனைச் சந்தித்து சில கேள்விகளை முன்வைத்தோம்.

**காவிரி டெல்டாவை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்திருப்பது வரவேற்கத்தக்க விஷயம்தானே?**

வரவேற்கிறோம். ஆனால், இந்த சட்டத்தில் நிறைய ஓட்டைகள் இருக்கின்றன. அதாவது, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல சட்டம் 24 கூறுகள், 2 இணைப்புகளைக் கொண்



Feb 26-2020-RIL



ஓ.என்.ஜி.சி. உள்ளிட்ட நிறுவனங்களுக்கு ஹைட்ரோகார்பன் எடுக்க மத்திய அரசு ஒப்பந்தம் போட்டுள்ளது. இந்தத் திட்டங்களை செயல்படுத்தக்கூடாது என்றுதான் விவசாயிகள் போராடுகிறார்கள். புதிய சட்டம் இதையெல்லாம் கட்டுப்படுத்தாது

டது. அதில் முதன்மைக்கூறான 4-ல் 21 ஏ-வில்தான் மிகப்பெரிய ஓட்டை. இந்தச் சட்டம் நடைமுறைத் தேதிக்கு முன்னர், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் உள்ள செயல்கள், திட்டங்களைப் பாதித்தல் ஆகாது என்கிறது.

2017 நெடுவாசல் திட்டம். அதன் ஒப்பந்ததாரர் ஜெம் நிறுவனம் எனக்கு வேண்டாமென்று விலகிவிட்டது. அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பது தெரியவில்லை. அதேபோல், 2019 காலகட்டத்தில் காவிரி பாயும் மாவட்டங்களில் வேதாந்தா, ஓ.என்.ஜி.சி. உள்ளிட்ட நிறுவனங்களுக்கு ஹைட்ரோகார்பன் எடுக்க மத்திய அரசு ஒப்பந்தம் போட்டுள்ளது. இந்தத் திட்டங்களை செயல்படுத்தக்கூடாது என்றுதான் விவசாயிகள் போராடுகிறார்கள். புதிய சட்டம் இதையெல்லாம் கட்டுப்படுத்தாது என்றால், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து என்ன பயன்?

**சேலம் விழாவில் பேசிய எடப்பாடி, ஹைட்ரோகார்பன் எடுக்கமாட்டோம் என்று தானே அறிவித்தார். பின் எப்படி சட்டமன்றத்தில் மாறி இருக்கும்?**

09-ந் தேதி முதல்வர் வெளியிட்ட அறிவிப்பை மிகவும் வரவேற்றோம். ஆனால், 10-ந் தேதி அமைச்சர் ஜெயக்குமார் டெல்லிக்குப் புறப்பட்டுச் செல்லும்போது, சந்தேகம் கிளம்பியது. அந்த சந்தேகத்தை சட்ட முன்வடிவு மெய்ப்பித்திருக்கிறது. முதல்வர் நினைத்தது ஒன்று. டெல்லியில் நடந்தது அதற்கு மாறாக இருந்திருக்கிறது என்றே தோன்றுகிறது. அதனால்தான், பிப்ரவரி 20-ந் தேதிக்கு முன் திட்டங்களைக் கட்டுப்படுத்தாது என்று அவரே குறிப்பிட்டுள்ளார்.

**நாகை, கடலூர் மாவட்டங்களில் நடக்கவிருந்த பெட்ரோலிய முதலீட்டு மண்டலத்தை ரத்து செய்திருக்கிறார்களே?**

நல்ல முடிவுதான். நாகை, கடலூர் மாவட்டங்களில் 45 கிராமங்களில் 57 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்த இருந்த திட்டம், பல்வேறு எதிர்ப்புகளால் ரத்தாகி இருக்கிறது. அதேநேரம், கடலூர் சிப்காட்டில் உள்ள ரசாயன தொழிற்சாலைகளை மூடவேண்டும் என்று மக்கள் போராடிக் கொண்டிருக்கையில், அதேபகுதியில் ரூ.50 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் பெட்ரோல் சுத்திகரிப்பு ஆலை தொடங்க, அமெரிக்க நிறுவனமான ஹால்டியாவுடன் ஒப்பந்தம் செய்துள்ளனர். இதனால் வெளியேறும் கழிவுகளால் விவசாயம் பாதிக்காதா?

**அப்படியானால், புதிய சட்டத்தால் எந்தப் பலனும் இல்லை என்கிறீர்களா?**

அவசர அவசரமாக அரைகுறையாக இச்சட்டம் இயற்றப்பட்டிருப்பதும், இந்திய அரசுக்குக் கடிதம் எழுதிவிட்டோம் என்று கூறுவதும், நீட் விலக்கு சட்டம் போல ஆகிவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது. சிறப்பு வேளாண் மண்டல நிர்வாகத்தைக் கவனிக்க முதலமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவிற்கு மாறாக, தன்னாட்சி அதிகாரமுள்ள வல்லுநர் குழுவை அமைத்து, அதில் விவசாயப் பிரதிநிதிகளை இடம்பெறச் செய்தால் மட்டுமே, நோக்கம் நிறைவேறும்.


சந்திப்பு: -இரா.பகத்சிங்

Feb 26 2020 Riz

## நக்கீரன் புலனாய்வு! சிறைத்துறையில் இடமாற்றம்!

தமிழகத்திலுள்ள சிறைகள் அனைத்துக்கும் சிறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் முறைகேடுகள் குறித்து சிறைத்துறை தலைவர் அலுவலகத்திலிருந்து சுற்றறிக்கை அனுப்பப்பட்ட நிலையில்... அதன் உண்மைத் தன்மையைப் புலனாய்வு செய்து நக்கீரனில் தொடர்ந்து வெளியிட்டு வருகிறோம். இந்நிலையில், கூடுதல் டி.ஜி.பி. மற்றும் சிறைத்துறை தலைவர் பொறுப்பு வகித்துவந்த ஆபாஷ்குமார் இடமாற்றம் செய்யப்பட்டு, சென்னை, பொருளாதார குற்றப்பிரிவு கூடுதல் டி.ஜி.பி. ஆகியிருக்கிறார்.

-ராம்கி




Feb 26-2020-RIL

# அடுத்த கட்டம்

## எடப்பாடிக்கு என்ன வந்தது?

தமிழ்நாடு சட்டமன்றத்தில் முகலிம்கள் குறிப்பாக முகலிம் பெண்கள் தமிழ்நாடெங்கும் நடத்தி வருகிற போராட்டம் குறித்து மாநில அரசிடம் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. குடியுரிமைச் சட்டம், மக்கள் பதிவேட்டுச் சட்டம் ஆகியவற்றிற்கு பா.ச.க.வின் மைய அரசுக்கு எடப்பாடி அரசு அளித்து வரும் ஆதரவு குறித்தும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

கேரளாவைப் போல், பிற பன்னிரெண்டு மாநிலங் களைப் போல் மைய அரசின் அந்தச் சட்டங்களைத் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தாமலிருக்க, அவற்றிற்கு எதிரான தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் என்றும் வற்புறுத்தப்படுகிறது.

எதற்கும் மசியவில்லை எடப்பாடி. தில்லி மாநிலங்கள் அவையில் இந்தச் சட்டங்கள் நிறை வேறத் தன்னுடைய உறுப்பினர்களை வாக்களிக்கச் செய்த அ.இ.அ.தி.மு.க. அதே சட்டங்களை எதிர்த்துத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றும் என்று நம்புவது அறியாமை. தில்லியில் உள்ள பா.ச.க. அரசுக்கு முழுக்க விலை போய்விட்ட கட்சி அ.இ. அ.தி.மு.க.



Feb 26-2020-RIL

**முயற்சியை எவனொருவன் கைவிடுகிறானோ, அப்போதே அவன் திறமை அவனிடமிருந்து போய்விடுகிறது -எமர்சன்**

சென்ற பாராளுமன்றத் தேர்தலில் அதற்கான விலையைக் கொடுத்து தமிழ்நாட்டில் துடைத் தெறியப்படும் நிலையை அடைந்த பிறகும், பாடங் கற்றுக் கொள்ளும் தகுதியான நிலையில் அந்தக் கட்சியின் தலைமை இல்லை.

வெறும் பதினெட்டு விழுக்காடாக அ.இ.அ.தி.மு.க.வின் வாக்கு வங்கி சரிந்து விட்ட பிறகும், அ.இ.அ.தி.மு.க. மாறவில்லை என்றால், அஃது அழிவை நோக்கிய பயணம்தானே.

செயலலிதாவும் எல்லா தவறுகளையும் முரட்டுத்தனமாகச் செய்வார். ஆனால் மக்கள் எதிர்க்கிறார்கள் என்றால், அதிகாரம் பறிபோய் விடும் என்னும் அச்சத்தில், எச்சிலை விழுங்கிக் கொண்டு பின்வாங்கி விடுவார். அதிகாரத்தை விடத் தன்மானம் பெரிதென்று அவர் எப்போதும் கருதியதில்லை.

குலதெய்வக் கோயில்களுக்கு ஆடு, மாடு வெட்டுவதற்கு எதிராக அவர் கொண்டு வந்த சட்டத்தை, அவரே குப்பைத் தொட்டியில் வீசி விட்டார்.

ஒருநாள் ஓர் இளைஞனைத் தன்னுடைய சுவீகாரப் புத்திரன் என அறிவிப்பார். அந்த இளைஞனுக்கு நூறு கோடி செலவில் திருமணம் செய்து வைப்பார். 'ஏது இவ்வளவு பணம்?' எனக் கேள்வி எழும்பி, செயலலிதா பதவி இறக்கம் செய்யப்பட்ட பிறகு, 'அந்தப் பையன் என் மகனே இல்லை' என்று அறிவிப்பார்.

தான் பதவியில் இருக்க வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்தக் கொள்கையையும் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை.

செயலலிதாவின் சேவல் சின்னக் காலத்திலேயே அவரோடு இணைந்தும், அவரிடமிருந்து பாதி யைத்தான் கற்றுக் கொண்டிருக்கிறார் எடப்பாடி.

யார் யாரை எல்லாம் மேயவிட்டால், தான் தொடர்ந்து தோட்டக்காரனாக இருக்க முடியும் என்பது எடப்பாடிக்குக் கை வந்திருக்கிறது. கட்சியை மேய்ப்பது ஒரு பாதி என்றால், மக்களை வசப்படுத்துவது இன்னொரு பாதி.

ஆனால் இதே போக்கில் போனால், அடுத்த ஐந்தாண்டுக்குத் தோட்டக்காரனை மாற்றி விடுவார்கள் மக்கள் என்பது எடப்பாடிக்குத் தெரிந்திருக்க வேண்டாமா?

தன்னுடைய ஆட்சியின் குற்றத்தால், தான் பதவி இழப்பது ஒரு வகை. ஆனால் பாராளுமன்றத் தேர்தலில் வழித்தெறியப்பட்டதற்குக் காரணம் சேர்க்கைக் குற்றம்.

ஊழலின் உச்சம் எடப்பாடி என்றா லும், தி.மு.க. அதற்குச் சற்றும் சளைத்த தில்லை என்பதால், 'விட்டையில் முன் விட்டை என்ன? பின் விட்டை என்ன?' என்று மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு மாற்று இல்லை. ஆகவே ஊழலை ஊழலே இடப்பெயர்ச்சி செய்யும் கேவலமான அரசியல் கடந்த ஐம்பதாண்டு களாக நடந்து வருகிறது இந்த இன்பத் தமிழ்நாட்டில்.

இதற்கு அப்பாற்பட்டு வெறுப்பை அடிப்படையாகக் கொண்ட, மக்களைப் பிளவுபடுத்திப் பார்க்கும் இன்னொரு கேவலமான அரசியல், பாரதிய சனதா கட்சியின் வாயிலாகத் தமிழ்நாட்டுக்குள் கடந்த ஐம்பதாண்டுகளாக நுழைய முயன்று வேர் கொள்ள முடியாமல் தவிக்கிறது.

எதிர்பாராத விபத்தாக மோடி தில்லி யில் ஆட்சியைப் பிடித்து விட்ட நிலையில், அதிகாரத்தின் துணைகொண்டு இந்த பிளவு அரசியலைப் பெரிதாக்கி, இந்தியாவை ஓர் இந்து நாடாக்கும் முயற்சிக்கு எடப்பாடி ஏன் துணை போக வேண்டும்? சில தேவைகள் இரு தரப்பிலும் இருந்தன. அவை முடிந்தன. இதே நிலை நீடித்தால் ஆட்சியை அடுத்த முறை அடைய முடியாமல், எடப்பாடிக்குப் போய் உழவு செய்யும் நிலை ஏற்படுமே ஒழிய, ஏற்படப் போகும் வேறு நன்மை என்ன?

பா.ச.க.வின் கூட்டும், அந்தக் கூட்டின் காரணமாகக் கண்ணை மூடிக் கொண்டு, மோடி கொண்டு வரும் பிளவுச் சட்டங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொடுப்பதும், எல்லா வகையிலும் ஒரு தற்கொலை முயற்சி என்பது எடப்பாடிக்குப் புரிய வேண்டாமா?

வீட்டை விட்டு வெளிவராத முசுலிம் பெண்கள் வீதிக்கு வந்து போராடுகிறார்கள் என்றால், எந்த அளவுக்கு அவர்கள் அச்சத்தின் உச்சத்தில் இருக்க வேண்டும்.

எடப்பாடியார் சட்டமன்றத்தில் வழக் கத்திற்கு மாறாகச் சீற்றத்துடன் பேசுகிறார்: 'தமிழ்நாட்டில் இந்தச் சட்டங்களால் பாதிக்கப்பட்டவர்கள் யார்? யார்? ஒரே ஒருவரையாவது காட்ட முடியுமா?'

இதையேதான் ரசினியும் சொல்

பழ.கருப்பையா

Feb.26-2020.Rh

வெளியே காட்டிய கோபம் மன்னிப்புக்கு வழி தேடும்; உள்ளே அடக்கிய கோபம் பழிக்கு வழி தேடும் -புல்லர்

கிறார்: "அப்படி ஒரு பாதிப்பு முசுலிம்களுக்கு வருமென்றால், அவர்களுக்காகக் களத்தில் நிற்கிற முதல் ஆளாக நான் இருப்பேன்.'

வெள்ள மட்டம் உயரும் என்னும் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல், வெள்ளம் வந்து அடித்துக் கொண்டு போகும் போது எவ்வளவு பெரிய ஆளும் எந்த வகையில் உதவ முடியும்?

எடப்பாடி கேட்கிறாரே ஒரே ஒருவரை யாவது காட்ட முடியுமா என்று.

சட்டம் நடைமுறைக்கு வரும் போது, ஒரே ஒரு முசுலிமை மட்டுமல்ல, ஒட்டுமொத்த முசுலீம் சமூகத்தையும் காட்ட முடியும்- 'அவர்கள் இரண்டாந்தரக் குடிமக்கள் ஆகிவிட்டார்கள்' என்று. அப்போது காட்டி என்ன பயன்? வெள்ளம் தலைக்கு மேல் போயிருக்குமே.

பாகித்தானில் மாற்று மதத்தார்க்கு 'சரி உரிமை' இல்லை. வங்கதேசத்தில் இல்லை. உலகின் பல நாடுகளில் இல்லை.

அங்கெல்லாம் பெருவாரியான மக்களின் மதமே அரசு மதம். இவை சிந்தனையால், செயலால் வளர்ச்சி அடையாத நாடுகள்.

ஆனால் அமெரிக்காவில், ஐரோப்பிய நாடுகளில், இந்தியாவில் மனிதர்களுக்குத்தான் மதம் உண்டே ஒழிய, அரசுக்கு மதம் கிடையாது.



இந்தியாவில் நூற்றுக்குப் பத்து கோடியாக இருக்கும் இந்துக்களுக்கும், பத்து கோடிக்கு மேல் இருக்கும் முசுலிம்களுக்கும், கிறித்துவர்களுக்கும் வெறும் ஆயிரம் குடும்பங்களே உள்ள பார்சிகளுக்கும் சமமான உரிமைதான்.

இன்னும் சொன்னால் சிறுபான்மை நிறுவனங்களைப் பாதுகாக்கும் சட்டங்களும் கூட இந்தியாவில் உண்டு. இதுதான் காந்தி செதுக்கிய இந்தியா.

அமெரிக்க அதிபர் டிரம்ப் இந்தியா வருகிறார். மோடி அரசின் சமய வெறுப்புக் கொள்கை குறித்து அவர் மோடியுடன் விவாதிப்பார் எனக் குறிப்புகள் தெரிவித்தன. டிரம்பிடம் கண்டிப்பாக 'வாயை மூடு' என்று சொல்ல முடியாது.

மோடி அரசின் மத வெறுப்புக் கொள்கையை துருக்கி அதிபர் கண்டித்தபோது, 'இது உள்நாட்டு விவகாரம், வாயை மூடு' என்றது இந்திய அயல் விவகாரத்துறை.

மலேசிய அரசு இந்தச் சட்டங்களைக் கண்டித்தபோது சினத்தின் உச்சத்திற்கே போன மோடி, மலேசியாவிலிருந்து பாமாயில் வாங்குவதை நிறுத்திவிட்டார்.

நாம் இசுலாமிய நாடுகளிலிருந்துதான் கச்சா எண்ணெய் (Crude Oil) வாங்குகிறோம் என்பது மோடிக்கு வசதியாக மறந்து போய்விட்டது போலும்.

United States Commission on International Religious Freedom சொல்கிறது.

இந்தச் சட்டம் தவறான இலக்கைக் கொண்டிருக்கிறது. முசுலிம்கள் மட்டுமே NRCஆல் கடுமையாகப் பாதிக்கப்பாடுவார்கள். முசுலிம் அல்லாதவர்கள் CAA சட்டத்தால் பாதுகாக்கப்பட்டு விடுகிறார்கள்.

It runs counter to India's rich secular pluralism and the constitution என்று வரிந்து வரிந்து இந்தியாவின் மைய அரசை சாடியிருக்கிறது. உலக நாடுகளில் நம்முடைய முகம் தொங்கி விட்டது.

உலக நாடுகளுக்கெல்லாம் புரிவது நம்முடைய எடப்பாடிக்குப் புரியவில்லை.

ஆனால் இன்னொரு பக்கம் 'இதற்கு விலை ஆட்சியோ?' என்னும் அச்சமும் எடப்பாடிக்கு இருக்கிறது.

மெக்கா பயணம் (Haj) மேற்கொள்ள இருக்கும் இசுலாமியர்களின் வசதிக்காக பதினைந்து கோடியில் ஓர் இல்லம் கட்டிக் கொடுக்கப் போகிறதாம் எடப்பாடி அரசு. இசுலாமிய மத குருக்களுக்கு (Ulama) மாதாந்திர ஓய்வூதியத்தை ரூ.1500லிருந்து ரூ.3000 ஆக உயர்த்துகிறதாம் எடப்பாடி அரசு.

அவர்கள் புதிய இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு ரூ.25000 மானியமாக வழங்கப் போகிறார்களாம்.

வாழ்வதற்கு உரிமை கேட்கிறார்கள் முசுலிம்கள். அவர்களில் சிலருக்குப் பொரி உருண்டை வழங்குவதைத் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார் எடப்பாடி.


மோடி அறிவு தெளியும் பருவம் எய்து முன்னரே வெறுப்பு அரசியலில் பயிற்றுவிக்கப்பட்டு விட்டார்.

எடப்பாடிக்கு என்ன வந்தது?

(தொடரும்)

# ஜி.எஸ்.டி.
# கொள்கையா?
# கொள்ளையா?

Feb 26-2020-RIL





# வீடியோவான காமலீலை! பாகிஸ்தானுக்கு உளவு சொன்ன இந்திய கடற்படை அதிகாரிகள்!

கடற்படையில் தற்போதைய பரபரப்பு பேச்சு 'ஆபரேசன் டால்பின்' பற்றித்தான்.

13 பேர் சிக்கிய ஆபரேஷனில் முக்கியமாக சிக்கியவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாலுமி. அவர் பெயர் பங்கஜ் அய்யர். அவரும் அவரது பத்து நண்பர்களும் அவரைப் போலவே உயர் சமூகப் பிரிவைச் சேர்ந்தவர்கள். சஞ்சய் திரிபாதி, வேத்ராம், தீபக் திரிவேதி, சதீஷ் மிஸ்ரா, ருஷி மிஸ்ரா என ஐந்து பேர் பங்கஜ் அய்யரின் பேஸ்புக் நண்பர்கள். சஞ்சய் ராவத், ராகுல் சிங், சங்கேத் குமார் தேவ்சரன் குப்தா, விகாஸ்குமார், பாபுல்சிங், ரிங்கு தியாகி என மிச்சமுள்ளவர்கள் பங்கஜ் அய்யரின் சமூக வலைத்தளங்களுக்குள் வந்துபோனவர்கள். இதில் சதீஷ் மிஸ்ரா என்கிற உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த உயர்சாதி இளைஞன் ஹவாலா எனப்படும் வெளிநாட்டு பணத்தை மாற்றித்தரும் தொழிலைச் செய்பவர். இவருக்கு உபரித் தொழிலாக பாலியல் தொழிலும் தெரியும். அதனால் பாகிஸ்தானுடன் அறிமுகத்தைப் பெற்றுத் தருகிறது. பாகிஸ்தானிலிருந்து நேபாளம் வழியாக உத்திரப் பிரதேசத்திற்கு வருபவர்களுக்கு சதீஷ் மிஸ்ரா உதவுகிறார். அவர்களது பாகிஸ்தான் ரூபாய் நோட்டுகளை இந்திய நோட்டுகளாக மாற்றுகிறார். அதன்பிறகு அடுத்தகட்டமாக பாகிஸ்தானில் அச்சடிக்கப்பட்ட இந்திய ரூபாய் நோட்டுகளை புழக்கத்தில் விடுகிறார். இதனால் பணக்காரனாகிறார். இந்த தொழில் பழக்கத்தால் பாகிஸ்தான் உளவுத்துறையின் தொடர்பு கிடைக்கிறது. பாகிஸ்தான் உளவாளியாகவே உருமாறுகிறார்.

இந்தியாவும் பாகிஸ்தானும் ராணுவ ரீதியான உளவுகளுக்காக அதிகமான பணம் செலவு செய்கின்றன. சமீபத்தில் காஷ்மீரில் ஊரி எனப்படும் பாகிஸ்தான் பகுதியில் உள்ள தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்களை குறிவைத்து தாக்கியது இந்தியா. அது பாகிஸ்தான் ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் இந்திய ராணுவத்திற்கு கொடுத்த தகவலினால்தான் நடந்தது. அதுபோல இந்தியாவின் ராணுவத்தில் இருந்து தகவல்கள் பாகிஸ்தானுக்கு செல்கிறதா என இந்திய உளவுத்துறை கண்காணித்து வந்தது. அப்பொழுதுதான் சதீஷ் மிஸ்ரா பற்றியும், அவர் ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் உள்ள கிழக்குப் பகுதி கடற்படை முகாமிலுள்ள கப்பற்படை மாலுமிகளோடு தொடர்பு வைத்திருக்கிறார்

Feb 26-2020-RL










எனவும் விசாகப்பட்டினம் போலீசார் இந்திய உளவுத் துறைகளுக்கு அளித்த தகவல் கிடைத்தது.

சதீஷ் மிஸ்ரா தமிழ்நாட்டுக்காரரான பங்கஜ் அய்யரை தொடர்புகொள்கிறார். செல்போனில் ஆபாசப் படங்களைப் பார்க்கும் பழக்கம் கொண்ட அய்யரை... மிஸ்ரா ஆபாச வெப்சைட்டுகளில் உள்ள லைவ் சாட்டுகளில் இடம்பெறும் பெண்ணிடம் பேச வைக்கிறார். அந்தப் பெண் அழைத்த இடத்திற்குச் செல்கிறார் பங்கஜ் அய்யர். அவர்களின் நெருக்கத்தை ரகசிய கேமராவில் பதிவு செய்யும் சதீஷ் மிஸ்ரா அதை வெளிக்காட்டாமல் அந்தப் பெண் மூலமாக பணம் கொடுக்கிறார். அவரது நண்பர்களை அழைத்து வந்து அறிமுகப்படுத்துகிறார். கரும்பு தின்ன கூலியா என நண்பர்கள் ஐந்து பேருடன் வருகிறார் பங்கஜ். அனைவரையும் ரகசியமாக படமெடுக்கிறார் சதீஷ் மிஸ்ரா. அந்த எண்ணிக்கை 13 பேராகிறது.

மகாராஷ்டிராவில் உள்ள அய்யர் படை முகாம், சென்னை முகாம் என பங்கஜின் நண்பர்கள் இத்தகைய பாலியல் விளையாட்டில் ஈடுபடுகிறார்கள். எல்லாவற்றையும் படம் எடுத்த சதீஷ் மிஸ்ரா அதைக்காட்டி "இந்திய ராணுவ வீரர்களான நீங்கள் அடையாளம் தெரியாத பெண்ணிடம் எதற்காக பணம் பெற்றீர்கள் என உங்கள் அதிகாரிகள் கேட்டால் என்ன சொல்வீர்கள்?" எனக் கேட்கிறார்.

திணறிய அவர்களிடம், "இதைவிட நிறைய பணம் தருகிறேன். இந்திய கப்பல் படையின் நவீன போர்க் கப்பல்கள் பற்றியும் அதன் இயக்கத்தில் உள்ள ரகசியத்தைப் பற்றியும் சொன்னால் போதும்" என சதீஷ் மிஸ்ரா சொல்ல, பொறியில் சிக்கியவர்கள் இந்திய கப்பற்படை பற்றிய ரகசிய தகவல்களைப் பரிமாறுகிறார்கள்.

விசாகப்பட்டினத்தில் ஒரு லாட்ஜில் இந்த டீம் எல்லை மீறி தகராறு செய்ய, உஷாரான போலீஸ் மத்திய உளவுப் பிரிவிற்கு தகவல் சொல்ல... அவர்கள் பங்கஜ் அய்யரின் முகநூல் கணக்குகளை ஆராய, அதில் இருந்த ஆபாசப் படங்களும் அந்தப் பெண்களுடன் இவர்கள் எடுத்த போட்டோக்களும் மற்றொரு முனையில் சதீஷ் மிஸ்ராவையும் கொண்டுவந்தது. கைது நடவடிக்கை வேகமானது.

முஸ்லிம் மக்களை தேசவிரோதிகளாக சித்தரிக்கும் மோடி ஆட்சியில், பாகிஸ்தானுக்கு உளவு சொல்லி சிக்கிய கடற்படை அதிகாரிகளில் ஒருவர்கூட முஸ்லிம் கிடையாது. எல்லோருமே 'தேசபக்தாள்'தான்(!).

-தாமோதரன் பிரகாஷ்

Feb 26-2020-RIL

குவைத், பஹ்ரைனில் முதன்முறையாக கொரோனா வைரஸ் பாதிப்பு : சீன பலி எண்ணிக்கை 2592 ஆக உயர்வு

# எடப்பாடியின் பா.ம.க. பாசம்!



Feb 26-2020-RIL

அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து பா.ம.க. வெளியேறிவிடாமல் பாதுகாப்பதில் கவனமாக இருக்கிறார் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி.

தமிழக சட்டமன்றத்தில் பட்ஜெட் மீதான விவாதக் கூட்டம் கடந்த வாரம் முடிந்த நிலையில் மூத்த அமைச்சர்கள் ஓ.பி.எஸ்., செங்கோட்டையன், ஜெயக்குமார், தங்கமணி, வேலுமணி, உதயக்குமார், செல்லூர் ராஜு உள்ளிட்டவர்களிடம் இயல்பாக பேசிக்கொண்டிருந்தார் எடப்பாடி. பட்ஜெட் விவாதங்களில் தி.மு.க. முன்வைத்த சிலபல விசயங்கள் குறித்த கமெண்ட் அங்கே எதிரொலித்திருக்கிறது.

குறிப்பாக, குடியுரிமை சட்டத்தால் யாருக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டுள்ளது? என சட்டமன்றத்தில் அண்ணன் எடப்பாடி எழுப்பிய கேள்விகளுக்கு மறுநாள் மு.க.ஸ்டாலின் பதிலடி கொடுத்தால் அதனை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்து நிறைய பாயிண்டுகளை தயாரித்து வந்தோம். ஆனால், அதற்கான சந்தர்ப்பத்தை நமக்கு ஸ்டாலின் கொடுக்கவே இல்லை" என அமைச்சர்கள் சொல்ல, அதனை ஆமோதித்துள்ளார் எடப்பாடி.

துறை ரீதியிலான மானியக்கோரிக்கைகளை நிறைவேற்ற மார்ச்-15 முதல் மீண்டும் சட்டமன்றத்தை கூட்டுவது பற்றியும் விவாதித்தனர். இதனையடுத்து அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகளை குறித்தும், ராஜ்யசபா தேர்தல் குறித்தும் பேசப்பட்டிருக்கின்றது.



அன்புமணி

இது குறித்து அ.தி.மு.க. மேலிட தொடர்பாளர்களிடம் விசாரித்தபோது, "ராஜ்யசபா தேர்தலில் 3 இடங்களை நம்மால் ஜெயிக்க முடியும். ஆனால், முந்தைய தேர்தலில் பா.ம.க.வுக்கு கொடுத்தது போல தற்போது ஒரு இடத்தை கேட்டு பா.ஜ.க.வும் தே.மு.தி.க.வும் நெருக்கடி கொடுக்கும். அதற்கு ஒப்புக்கொள்ளக் கூடாது. மூன்று இடங்களிலும் அ.தி.மு.க.தான் போட்டியிட வேண்டும். லோக்சபாவில் நமக்கு ஒரே ஒரு எம்.பி. இருக்கும் நிலையில் ராஜ்யசபாவில் அ.தி.மு.க.வுக்கு கிடைக்கும் வாய்ப்புகளை தோழமைக் கட்சிகளுக்கு தாரை

**சாத்தூர் பட்டாசு ஆலை வெடிவிபத்தில் மேலும் 3 பேர் உயிரிழப்பு : பலி எண்ணிக்கை 6 ஆக அதிகரிப்பு**

டி.என்.பி.எஸ்.சி. தேர்வு முறைகேடு : ஜெயக்குமார், ஓம்காந்தனை மார்ச் 4 வரை நீதிமன்றக் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

வார்த்தால் கட்சிக்குள் மனக்கசப்புகள் உருவாகும் என அமைச்சர்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டிருக்கிறார் எடப்பாடி.

அப்போது, அ.தி.மு.க. கூட்டணியை விட்டு பா.ம.க. விலகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் போன முறை பா.ம.க.வுக்கு ஒரு ராஜ்ய சபா சீட்டை ஒதுக்கினோம். அதேசமயம், சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. வலிமையாக உள்ள வட தமிழகத்தில் அதனை நாம் எதிர்கொள்ள நம் கூட்டணியில் பா.ம.க. இருப்பது அவசியம். சட்டமன்றத் தேர்தலின் போது நேரடி அரசியலில் ரஜினி இறங்கினால் அப்போது கூட்டணி கணக்குகள் தாறுமாறாக மாறுவதற்கு வாய்ப்பு

# ...ஸின் தேர்தல் வியூகம்!

இருக்கிறது. ரஜினி பின்னால் பா.ம.க.வும் பா.ஜ.க.வும் போவதற்கும் வாய்ப்பு உண்டு. பா.ம.க. அப்படி ஒரு நிலையை எடுத்தால் வட தமிழகத்தில் நமக்கு சிக்கல்தான் என சொல்லியிருக்கிறார் எடப்பாடி" என்கிறார்கள்.

இதற்கிடையே, ரஜினியுடன் பா.ம.க. நட்பை வளர்த்து வருவதையறிந்து அவ்வப்போது டாக்டர் ராமதாசிடம் நலம் விசாரித்து வருகிறார் எடப்பாடி. அதேசமயம், அ.தி.மு.க.வை விட்டு பா.ம.க. விலகி ரஜினியை ஆதரித்து விடக்கூடாது என்பது மூத்த அமைச்சர்கள் இருவர் மூலம் ராமதாசிடம் சொல்லப்பட்டு வருகிறது. இதனால் பா.ம.க.வின் கிச்சன் கேபினெட்டில் சட்டமன்றத் தேர்தல் பற்றி அடிக்கடி விவாதங்களும் நடக்கின்றன.

பா.ம.க.வின் உள்வட்டங்களிடம் பேசியபோது, ''சட்டமன்றத் தேர்தலில் ஆட்சியை தி.மு.க. கைப்பற்ற விட்டு விடக் கூடாது என டாக்டர் ராமதாசும் அன்புமணி ராமதாசும் அழுத்தமாக இருக்கிறார்கள். ஸ்டாலின் முதல்வராகி விட்டால் அன்புமணியின் முதல்வர் கனவு நிறைவேறாது. அதாவது, 2026 தேர்தலில் அன்புமணியை முதல்வராக்க 2021 தேர்தலிலிருந்தே அதற்கான அரசியலைத் துவக்க வேண்டும் என்பது பா.ம.க.வின் அஜெண்டா! ஆனால், 2021-ல் ஸ்டாலின் முதல்வராகி விட்டால் அதன் பிறகு தி.மு.க. அசைக்க முடியாத அரசியல் சக்தியாக மாறும்.


அதனால், தி.மு.க.வை ஆட்சிக்கு வராமல் 2021-ல் தடுத்துவிட்டால் அடுத்த ஐந்தாண்டுகளில் ஸ்டாலின் அரசியல் ரீதியாக பலகீனமாகிவிடுவார் என டாக்டர் ராமதாசும் அன்புமணியும் கணக்குப் போட்டுள்ளனர். அதற்காக பா.ம.க.வின் அரசியல் நிலைப்பாடுகளை அ.தி.மு.க., பா.ஜ.க., ரஜினி என்கிற மூன்று வட்டங்களை மையப்படுத்தியே அடிக்கடி ஆலோசிக்கிறார்கள். மத்தியில் அன்புமணிக்கு அமைச்சர் பதவி கிடைத்தால் சட்டமன்றத் தேர்தலின் போது பா.ஜ.க.வையும் மனதில் வைத்தே கூட்டணி அமைப்பது. அமைச்சர் பதவி கிடைக்கவில்லை எனில் பா.ம.க.வை மட்டுமே முன்னிறுத்தி கூட்டணி பேசுவது என்கிற நிலைப்பாட்டுக்கும் வந்திருக்கிறார்கள்.

அந்த வகையில், ரஜினி கட்சி ஆரம்பிக்கிற நிலையில், அவருடன் கூட்டணி வைப்பது பா.ம.க.வுக்கு பலம் என திட்டமிடுகிறார் அன்புமணி. ஆனால், ராமதாசோ, அ.தி.மு.க.வா? ரஜினியா? என்கிற போது அ.தி.மு.க. கூட்டணி தான் சரியாக இருக்கும் என கருதுகிறார். காரணம், ரஜினி இன்னும் அரசியல் ரீதியாக தன்னை நிரூபிக்கவில்லை என்பதுதான். டாக்டரின் இந்த மனநிலையை அறிந்து, ரஜினியுடனான கூட்டணிதான் சரியாக இருக்கும் என தேவைப்படுகிற போதெல்லாம் அவரிடம் வலியுறுத்தி வருகிறது பா.ம.க. கிச்சன் கேபினெட்! பா.ம.க.வின் இப்படிப்பட்ட அரசியலை உள்வாங்கியிருப்பதால்தான் பா.ம.க.வை கெட்டியாகப் பிடித்துக் கொள்ள டாக்டரோடு அழுத்தமான தொடர்பில் இருக்கிறது அ.தி.மு.க. தலைமை! என விவரிக்கின்றனர்.

-இரா.இளையசெல்வன்


ஸ்டாலின்

Feb 26-2020RIL



வேறுபாடுகளை களைந்து
அனைத்து மதத்தினரும்
இந்தியாவில் ஒற்றுமையாக
உலகிற்கு முன்னுதாரண
மாக வாழ்ந்து வருகின்றனர்
-அமெரிக்க அதிபர் ட்ரம்ப் உரை

இத விட வேற யாராலயும்
புத்தி சொல்ல முடியாது
உங்களுக்கு...







தமிழக சிறைத்துறை டி.ஜி.பி.யாக சுனில்குமார் சிங் நியமனம்

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வருகையால்
இந்தியாவிற்கு எந்த பலனும்
இருக்காது -சுப்பிரமணியன் சுவாமி



வராரு... மோடிய
கேவலமா பேசுறாரு...
அமித்ஷாவ அசிங்கமா
திட்றாரு... கேட்டா
பா.ஜ.க.காரன்குறாரு...
என்னய்யா நடக்குது
நாட்ல...?



அமெரிக்க பொருளாதாரத்தை மேம்படுத்து
வதற்கான நோக்கத்தில்தான் அதிபர் ட்ரம்ப்
இந்தியா வருகிறார். அவருடைய வருகை
யால் இந்தியாவிற்கு எந்த பலனும் இருக்காது.
அமெரிக்காவை வலுப்படுத்த சில ராணுவ
ஒப்பந்தங்கள் கையெழுத்தாக வாய்ப்புகள் உள்ளன




எனக்கு எதிரிங்க
வெளிய இல்ல...
கூடவே
இருக்காங்க...

-சூனா பானா

காந்தியடிகளின் ராட்டையை
மனைவியோடு சேர்ந்து சுற்றி மகிழ்ந்த
ட்ரம்ப்!





எங்க அப்படியே காந்தியை சுட்டுக் கொன்னது
யாருன்னு பக்கத்துல இருக்குறவர்ட்ட
கேளுங்க... ட்ரம்ப் அண்ணே...?

Feb 26-2020-RIL













**ஷிவானி சிவக்குமார்:** "கர்நாடகாவில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக இளம்பெண் கோஷமிட்டதற்கு மு.க.ஸ்டாலின்தான் காரணம்" -பொன்னார் ● இந்த வெயிலுக்கே இப்படினா... மே மாசம் என்ன ஆகுமோ?

**இராஜசேகர்:** தமிழில் பெயர் வைக்காத வணிக நிறுவனங்களுக்கான அபராத தொகை உயரும் -மா.பாண்டியராஜன் ● அதை mafoi போன்ற பெருநிறுவனங்களில் இருந்து தொடங்கலாமே?

**பிரபு ஜி:** எனக்கு எதிராக ஒரு கூட்டமே வேலை செய்கிறது -நடிகர் சிம்பு ● 'மாநாடு' படக் குழுவதான் சொல்றாரு. ஷூட்டிங்க்கு வரச்சொல்லி டார்ச்சர் பண்றாங்களாம்...

**மயக்குநன்:** ரஜினி, கமல் செயல்பாடுகள் நம்பிக்கை அளிப்பதாக இல்லை -எஸ்.ஏ.சந்திரசேகர் ● வருமான வரித்துறை செயல்பாடுகளாவது நம்பிக்கை அளிக்கிற மாதிரி இருந்துச்சா பாஸ்..?!

**பர்வீன் யூனுஸ்:** சிலிண்டர் விலை உயர்வுக்கு குளிர்காலமே காரணம் -அமைச்சர் தர்மேந்திர ப்ரதான் ● எங்க போறாத காலமும்தான்!

தொகுப்பு : மதிவாணன், அருண்பாண்டியன், துரை.கணேசன்



PUBLISHED BY NAKKHEERAN GOPAL ON BEHALF OF NAKKHEERAN PUBLICATIONS, 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14, AND PRINTED BY HIM AT NAKKHEERAN PRINTERS AND BINDERS 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14. EDITOR : NAKKHEERAN GOPAL,

NAKKHEERAN TAMIL BI-WEEKLY REGD No.TN/CH/(C)/573/2020-2022
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER No.: 49456/88, Date of Publication: Every Tuesday & Friday

